# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 1] விகாரி ஆடி - 1959 ஆகஸ்டு [மணி 11


## திருச்செந்தூர் செந்திலாண்டவன்
# அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்

'பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ
விசும்பு ஆருக விரைசெலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச்சேறலும் நிலைஇய பண்பே'

—நக்கீரர்

'வெண்டலைப்புணரி அலைக்கும் செந்தில்'

—புறநானூறு

'திருமணி விளக்கின் அலைவாய்'

—அகநானூறு

'சீர் கெழு செந்தில்'

—சிலப்பதிகாரம்

'செந்திலை யுணர்ந்துணர்ந்துணர்வுறக்
கந்தனை யறிந்தறிந்தறிவினிற்
சென்று செருகுந்தடந் தெளிதரத் தணியாத
சிந்தையு மவிழ்ந்தவிழ் ந்துரையொழித்
தென்செயல ழிந்தழிந் தழியமெய்ச்
சிந்தைவர என்றுநினை தெரிசனைப்படுவேனோ'

—அருணகிரியார்

'சகல முமுதலாகிய அறுதிசிலை
மேவிய தடமயில் தனிலேறிய பெருமாள்
ஆறு திருப்பதியில்வளர் பெருமாளே'

என்பது அருணகிரியார் திருவாக்கு. கலியுக வரதனாகிய முருகப்பெருமான் திருக்கோயில் கொண்டருளிய திருத்தலங்கள் பல. அவற்றுள் முதன்மையாக வுள்ளவை திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழநி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்னும் ஆறுபடை வீடுகள். அவற்றுள் சூரசம்மாரம் செய்து தேவர்களை மீட்ட படைவீடு திருச்செந்தூர்.

"சிக்கலில் வேல் வாங்கிச் செந்தூரில் சம்மாரம்" என்றொரு பழமொழி வழங்குகிறது. இன்னும் சிக்கல் சிங்கார வடிவேலன் அன்னை வேல்நெடுங்கண்ணியிடம் வேல் வாங்கும் காட்சி ஒரு கண் கொள்ளாக் காட்சியாக சஷ்டி உத்சவத்தில் நடைபெறுகிறது. இதற்குக் கந்தபுராணம் முதலிய நூல்களில் ஆதாரமிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் திருச்செந்தூர்த் திருப்புகழில் ஓரிடத்தில்

'பம்பரமே போலாடிய சங்கரி வேதாளநாயகி
பங்கய சீபாதநூபுரி கரசூலி
பங்கமிலா நீலி மோடி பயங்கரி
மாகாளி யோகினி
பண்டு சுராபானசூர ரொடெதிர் போர்கண்
டெம்புதல் வாவாழி
வாழியெனும்படி வீறான வேல்தர
என்றுமுளானே மனோகர
வயலூரா

இன்சொல்லி சாகாக்ருபாகர
  செந்திலில் வாழ்வாகியேயடி
யென்றனையீடேற வாழ்வருள்
  பெருமாளே'

என்று பாடுகிறார்.

முருகன் தமிழில் வைதாரையும் வாழ்விக்கும் செந்தமிழ்க் கடவுள். திருப்பரங்குன்றத்திலும் பழநியிலும் மகம்மதியர் வழிபாடியற்றுவதும் இலங்கையிலுள்ள கதிர்காமத்தில் சிங்களவரும் புத்தரும் ஏனையோரும் வழிபடுவதும் யாவரும் அறிந்ததே. முருகு என்ற சொல்லுக்கே அழகு, இளமை, மணம் இனிமை, தெய்வத்தன்மை எனப் பல பொருள்கள் உள. இத்தகைய பல்வேறு நற்பண்புகளுடன் விளங்கும் பரம்பொருளே முருகன்.

கந்தன் என்ற சொல் ஸ்கந்தன் என்ற வடமொழிப் பதத்திலிருந்து வந்தது. அதன் பொருள் இணைப்பு, பற்றுக்கோடு, கம்பம், தோள், வலிமை எனப் பல வகைப்படும். 'பற்றுக பற்றற்றான் பற்றினை' என்றபடி அவனே உண்மையான பற்றுக்கோடு. 'தன் கடன் அடியேனையும் தாங்குதல்' என்றார் அப்பர். தூண் போல் அசைவின்றி இருப்பதாலும் கம்பம் போன்றவன் முருகன். வில்லேந்திய முருகன் வலிமிக்க 12 தோள்களையுடையவன். உமாதேவியார் 'சேயவன் வடிவம் ஆறும் திரட்டி ஒன்றாய்ச் செய்தாள் ஆயதனாலே கந்தனும் நாமம் பெற்றான் முருகன்''

'கோலப்பால் விளங்கும் பரசுதரன்
  குன்றிலவரைக் கொடுசெல்லக்
கூட்டியணைத்துச் சேரவொரு
  கோலமாக்கிக் கவுரி திரு
முலைப்பால் குடித்த கனிவாயன்

முருகன் என்றார் பகழிக்கூத்தர். வைகாசி விசாகத்தில் தோன்றியதாலும், (வி—பட்சி, சாகன்-சஞ்சரிப்பவன்) மயிலாகிய பட்சியை வாகனமாகக் கொண்டு சஞ்சரிப்பவன் ஆதலால் முருகனுக்கு விசாகனென்ற பெயரும் உண்டு.

வைகாசி விசாகத் திருவிழா இந்த தலத்தில்தான் வேறெங்கும் காணாத தனிச் சிறப்புடன் கொண்டாடப் பெறுகிறது. அதிகாலையிலேயே அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று மக்கள் பெருந்திரளாக சமுத்திர ஸ்நானம் மற்றும் தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து இடைவிடாமல் கோயிலுக்குச் சென்று வழிபட்டுக்கொண்டேயிருப்பது ஒரு தனிப் பெருங் காட்சி. இந்த விழா வைகாசி வசந்தோற்சவமாக விசாக தினத்தை இறுதியாகக் கொண்டு பத்து நாட்கள் நடைபெறுகிறதென்றாலும் விசாக தினத்தன்றுதான் மக்கள் அயலூரிலிருந்து பெருந்திரளாக வந்து வழிபடுகிறார்கள். பத்து நாட்களும் விசேஷ அபிஷேகங்கள் நடந்தாலும் விசாகத்தன்று நாகர்கோயில் வெள்ளித் தாம்பாளக் கட்டளைகாரர் சிறந்த முறையில் உச்சிக் காலத்தில் ஜயந்திநாதர்க்கு அபிஷேகங்கள் செய்கிறார்கள். இதுவரையில் இந்த மகாபிஷேகம் ஜயந்திநாதர் இருக்கும் இடமாகிய சிறு அறையில்தான் நடந்து வந்திருக்கிறது. இது ஒருவருக்கும் புரியாமலே இருந்தது. இந்த ஆண்டில் இந்த அபிஷேகத்தைக் கோயில் பிரகாரத்தில் வைத்து எல்லோரும் பார்க்கும்படியாக நடத்தியதால் பல மக்கள் கண்டு களித்தார்கள். இனி இந்த அபிஷேகத்தை சஷ்டி மண்டபத்தில் வைத்து நடத்த வேண்டுமென்று ஆலய நிர்வாகக் குழுவினர் திட்டமிட்டிருக்கின்றனர். அன்று இரவு முருகப்பெருமான் ஸ்ரீவள்ளி தேவயானை சமேதராய் வசந்த மண்டபத்துக்கு எழுந்தருளி அங்கே பன்னிரண்டு முறை மத்ய மண்டபத்தைப் பிரதட்சணம் செய்வது வழக்கம். இந்த வைபவம் இதுவரை இரவு 10, 11 மணிக்கு தொடங்கப் பெறுவது வழக்கமாக இருந்ததால் பெரும்பாலான மக்கள் சுவாமி சண்முக விலாசத்துக்கு வந்தவுடனேயே தரிசனம் செய்துவிட்டுப் போய் விடுவார்கள். இந்த ஆண்டு இரவு சுமார் 8 மணிக்கு சுவாமியை எழுந்தருளச் செய்து ஒன்பது மணிக்கெல்லாம் வசந்த மண்டபத்தை அடைந்து கீழே காணும் பதினொரு விதமான பாராயண சங்கீத வாத்தியங்களுடன் பிரதட்சணம் நடைபெற்றதைப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டு மகிழ்ந்தார்கள்.

1. வேத பாராயணம்
2. தேவாரம் (திருமுறைகள்)
3. திருப்புகழ்

4. பிள்ளைத்தமிழ்
5. நாதசுரம்
6. பிரமதாளம்
7. நந்தி மத்தளம்
8. திருச்சின்னம்
9. வேல் வகுப்பு
10. வாள் வகுப்பு
11. கப்பல் பாட்டு.

முருகப் பெருமான் மத்திய மண்டபத்தில் எழுந்தருளியவுடன் வசந்த மண்டபத்தின் நடுவேயுள்ள ஒரு நீர்த்தொட்டியில் ஆறு மீன்கள் மனித உருப்பெற்றதாக மீன் விளையாட்டு என்ற ஒரு காட்சி நடைபெறுகிறது. இதன் தத்துவம் என்னவென்றால் பராசரமுனிவர் வெளியூர் சென்று தன் இல்லத்துக்குத் திரும்பியபோது தன்னுடைய ஆறு குமாரர்களும் மீன்களை எடுத்துப் போட்டு விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டு கோபங்கொண்டு 'மீன்களாய்ப்பிறந்து அவற்றின் துன்பத்தை அனுபவிக்கக்கடவீர்' என்று சாபமிட்டார். அந்தப் பிள்ளைகள் தங்கள் தவறை உணர்ந்து சாப விமோசனம் வேண்டியபோது "நீங்கள் சரவணப் பொய்கையில் மீன்களாக இருங்கள். முருகப் பெருமான் அவதார காலத்தில் உமாதேவியார் அங்கு வந்து அவரை எடுத்துப் பாலூட்டும் போது சரவணப் பொய்கையில் கலக்கும் பாலின் மகிமையால் நீங்கள் மீண்டும் மனித உருப்பெறுவீர்கள்' என்று அருள் செய்தார். அதன் பயனாக வைகாசி விசாகத்தன்று முருகன் ஆறு குழந்தைகளாகத் தோன்றி உமாதேவியரால் கூட்டி யணைத்துச் சேர ஒரு கோலமாக்கிப் பால்கொடுத்தபோது அந்தப் பொய்கையில் மீன்களாக இருந்த அறுவரும் சுய உருப் பெற்றனர் என்ற வரலாறுதான் 'மீன் விளையாட்டு' என்று காட்டப் பெறுகிறது. இனி இந்த திருவிளையாடலை ஆறு பொம்மை மீன்களையும் ஆறு ரிஷிகுமாரர் உருவங்களையும் வைத்துக் காட்ட வேண்டுமென்று ஆலய நிர்வாகக் குழுவினர் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

முருகன் ஆறுபடை வீடுகளில் தனிச் சிறப்பு வாய்ந்த இந்த திருப்பதியில் உள்ள திருக்கோயிலில் மூல ஸ்தானத்திலுள்ள முருகன் நின்ற திருக்கோலமாக ஒரு திருமுகத்துடனும், அபயவரத ஜபமாலை புஷ்பம் ஏந்திய திருக்கரங்களுடனும் கிழக்கு முகமாகக் காட்சி யளிக்கிறார். இந்த மூலமூர்த்தியின் பின்புறம் உள்ள சிவலிங்கமூர்த்தியை முருகப் பெருமான் வழிபட்டு வந்ததாக வரலாறு. மூலஸ்தானத்தை ஒட்டிய பாம்புப் பிரகாரம் என வழங்கும் உட்பிரகாரத்தில் கன்னி மூலையில் பஞ்சலிங்க மூர்த்திகள் எழுந்தருளியுள்ளார்கள். செந்திலாண்டவனின் ஆறுமுகநயினாராகிய உற்சவமூர்த்தி தெற்கு முகம் நோக்கி எழுந்தருளியுள்ளார். இவருக்கு நேர் எதிராகத்தான் சண்முக விலாசம் என்ற பிரதான வாயில் மண்டபம் அமைந்திருக்கிறது. கோயில் பிரகாரத்தில் வடமேற்கு, வடகிழக்கு பக்கங்களில் வள்ளியம்மை தெய்வயானை தனிக் கோயில்கள் அமைந்துள்ளன. ஈசான்யத்தில் நடராஜரும், பைரவரும் கோயில் கொண்டுள்ளனர். வெளிப்பிரகாரத்தில் வடபுறம் மகாவிஷ்ணுவுக்கும் ஒரு தனிக் கோயில் அமைந்திருக்கிறது. திருக்கோயிலுக்கு முன்னுள்ள சமுத்திர தீர்த்த கட்டம் வதனாரம்ப தீர்த்தம் என வழங்குகின்றது. குதிரை முகம் பெற்ற அரசி இத்தலத்தில் மூழ்கி சுயமுகம் பெற்றாள் என்பது வரலாறு. இதற்கு வடக்கேயும் தெற்கேயும் பல தீர்த்தங்கள் உள்ளன. கோயிலுக்குத் தெற்கே நாழிக்கிணறு இருக்கிறது.

இந்த கோயிலில் வழிபாட்டு முறை பின் வருமாறு:—ஸ்கந்த புஷ்கரணியென்ற குளத்தில் முதலில் நீராடி, பின்னர் நல்ல தண்ணீர்க் கிணறான நாழிக்கிணற்றில் நீராடி அதன் பின் கடல் நீராடுதல் உத்தமம். வழிபடுவோர் தூண்டுகை விநாயகர் கோயிலுக்குச் சென்று வழிபட்டு கோயில் வெளிப் பிரகாரத்தைச் சுற்றி வந்து சண்முக விலாசத்தில் நடு மண்டபத்தை வலம் வந்து கோயிலுக்குட் செல்ல வேண்டும்.

மூலஸ்தானத்தின் முன்பு வலது பக்கம் இருக்கும் விநாயகரை வழிபட்டு மூலஸ்தானத் திருவாயில் இருபாலராகிய வீரபாகு தேவர், வீரமகேந்திர தேவரை வணங்கி மூலவரை வழிபட வேண்டும். அதன் பின்பு ஆறுமுகநயினாரை வழிபட்டு உட்பிரகாரம் சென்று முதல் பிரகாரம் சுற்ற வேண்டும். பிறகு அடுத்துள்ள பிரகாரத்தில் வள்ளி

யம்மை, தெய்வயானை இருவரையும் வணங்கி சண்டேசரிடம் அனுமதி பெற்று நடராஜப் பெருமானையும் பைரவரையும் வணங்கி அருள் பெற்றுக் கொடிமரம் சுற்றி வெளிப் பிரகாரம் வந்து தெற்கு வாயில் அருகே யுள்ள குமரவிடங்கப்பெருமானை வணங்கி வழிபட்டு ஐராவத மண்டபம் உள்ள இரண்டாவது பிரகாரத்தில் கன்னி மூலையிலுள்ள 108 இலிங்கங்களை வழிபட்டு, மேற்குப் பிரகாரத்திலுள்ள முக்குறுணிப் பிள்ளையார் என் வழங்கும் கற்பக விநாயகரையும் வணங்கி, வடக்குப் பிரகாரத்திலுள்ள திருமாலை வழிபட்டு மீண்டும் ஆறுமுகநயினருக்கு எதிரிலுள்ள பிரதான வாயிலின் வழியே வெளியே சண்முக விலாசத்துக்கு வந்து அங்கே கிழக்கு நோக்கி இருந்து பஞ்சாட்சரம், சடாட்சர மந்திரங்களை ஜபிக்க வேண்டும்.

8—7—59 விடியுமுன் 3-45க்குமேல் 4–15 மணிக்குள் திருச்செந்திலாண்டவன் திருக்கோயிலில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷேகத்தின் போது அர்ச்சகர் பக்கத்திலுள்ளவர்கள்மேல் தண்ணீரைத் தெளித்தார். அவ்வளவில் முருகப்பெருமானின் இன்னருளே போன்று பன்னீர் தெளித்ததுபோல் ஐந்து நிமிஷங்கள் மழை தூறி நின்றது. அதுகண்ட பல்லாயிரக் கணக்கான மக்கள் மகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்தார்கள்.

முந்திய அஷ்டபந்தன கும்பாபிஷேகம் 18 ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. சாதாரணமாக 12 ஆண்டுக்கொருமுறை அஷ்டபந்தன மருந்து சாத்தப் பெறல் வேண்டும். இந்த கும்பாபிஷேகத்தை யொட்டிப் பல அரிய நூல்கள் வெளியிடப் பெற்றன. ஆலய நிதியிலிருந்து **தலபுராணமும், திருமுருகாற்றுப்படை** விளக்கமும், திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்தார் அவ்வாதீன முன்னுட்புலவர் சுவாமிநாத தேசிகர் இயற்றிய **திருச்செந்திற்கலம்பகமும்**, திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தாரால் அருணகிரியார் அருளிய **திருச்செந்தூர்த் திருப்புகழ்ப் பாடல்கள்** உரையுடனும், செந்திலாண்டவன் திருப்பணியில் மிகவும் ஈடுபட்ட சென்னை ஸ்ரீபாலசுப்பிரமணியம் டிரஸ்டாரால் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய **திருச்செந்தில் நிரோட்டகயமக அந்தாதி** குகஸ்ரீ இரசபதியவர்களின் உரையுடனும் வெளியிடப் பெற்றன.

இன்னும் மகா கும்பாபிஷேகத்தை யொட்டி அறநிலையத்துறை அமைச்சர் கனம் திரு. M. பக்தவத்சலம் அவர்களால், இடும்பன் கோயில் பிரதிஷ்டையும், நாழிக் கிணற்றுத் தண்ணீரைச் சுகாதார முறைப்படி குளிக்க நீர்த்தொட்டித் திறப்பும், சூரசம்மாரத்திற்குப் பின் முருகன் எழுந்தருளுவதற்கு சந்தோஷ மண்டபக் கால்கோள்விழாவும், கடற்கரை நீராடுமிடத்தில் படித்துறைக் கால்கோள்விழாவும், ஏழைகள் தங்க யாத்ரீகர் விடுதித் திறப்புவிழாவும், ஆனந்தவல்லி சமேத சிவக்கொழுந்தீசர் கோயிலில் நடராஜர் விக்கிரகப் பிரதிஷ்டை முதலியனவும் நிகழ்த்தப் பெற்றன.

..................ஒழுக்கமுடன்
இம்மைப் பிறப்பி லிருவா தனையகற்றி
மும்மைப் பெருமலங்கண் மோசித்துத்
—தம்மைவிடுத்
தாயும் பழைய வடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகந் துய்ப்பித்துச்—சேய
கடியேற்கும் பூங்கமலக் கால் காட்டியாட் கொண்
டடியேற்கு முன்னின் றருள்.

—கந்தர் கலிவெண்பா

திருந்தப் புவனங்க ளீன்றபொற்
பாவை திருமுலைப்பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டில்
ஏறி அறுவர்கொங்கை
விரும்பிக் கடல்அழக் குன்றழச்
சூரழ விம்மி அழுங்
குருந்தைக் குறிஞ்சி கிழவன்என்
றோதும் குவலயமே.

—கந்தரலங்காரம்

பன்னிரு கரத்தாய் போற்றி
பசும்பொன் மாமயிலாய் போற்றி
முன்னிய கருணையாறுமுகப்பரம்
பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக்
கருணைவாரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணுளிருக்கு
மாமணியே போற்றி.

—திருச்செந்தூர்த் தல புராணம்

## ஸ்ரீரங்கத்தில் மகா சம்ப்ரோட்சணம்

ஸ்ரீரங்கத்தில் 12-7-59 ஞாயிறு காலை 8-30 மணிக்குமேல் 9-30 மணிக்குள் பெரியபெருமாள் கோயில் மகாசம்ப்ரோட்சணம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பல்லாயிரக் கணக்கான மக்கள் கண்டு களித்தனர். அறநிலையத் துறை அமைச்சர் கனம் திரு. M. பக்தவத்சலம் அவர்களும், அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன் I.A.S. அவர்களும் கலந்து கொண்டார்கள். பல நூற்றுண்டுகளாகக் கண்டும் கேட்டறியாத வகையில் முதல்முதல் திருவரங்கநாதருக்கு மகாசம்ப்ரோட்சணம் நடைபெற்றதால் மக்கள் அன்று முழுவதும் வழிபாடு செய்தவண்ணம் இருந்தனர். சம்ப்ரோட்சணத்தை யொட்டிய பூர்வாங்க கிரியைகள் 6-7-59 முதலே முறைப்படி நடந்தேறின. 6-7-59 முதல் 12-7-59 முடிய நாள்தோறும் பேரறிஞர்கள் பலர் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

## அறநிலைய ஆணையர் இலங்கை யாத்திரை

அறநிலையத்துறை ஆணையர் திரு ஏ. உத்தண்டராமன் ஐ. ஏ. எஸ். அவர்கள், அவர்களின் மனைவியார், தஞ்சை துணை ஆணையாளர் திரு. ஏ. சக்கரை பி.ஏ., பி.எல். முதலியவர்கள் 17-7-59 ல் புறப்பட்டு இலங்கை சென்று சுற்றுப்பிரயணம் செய்துவிட்டு 27-7-59-ல் சென்னைக்குத் திரும்பினார்கள். இலங்கையில் கொழும்பு, மாத்ரை, கியாலி, டம்போலா, கதிர்காமம், கண்டி, யாழ்ப்பாணம், கீரிமலை, திருக்கோணமலை, சிகிரியா, மகிந்தலை, அனுராதபுரம், பொலனுருவை, திருக்கேதீச்சரம் முதலிய இடங்களுக்குச் சென்றார்கள். இலங்கை யாத்திரையைப்பற்றி அறநிலைய ஆணையர் அவர்கள் எழுதும் கட்டுரை அடுத்த (செப்டம்பர்) இதழில் வெளிவரும். —இதழாசிரியர்

## திருநெல்வேலி மாவட்ட திருக்கோயில்களின் இறைபணியாளர் பயிற்சிமுகாம், திருக்குற்றாலம்

திருநெல்வேலி மாவட்ட திருக்கோயில்களின் இறைபணியாளர்கள் பயிற்சி முகாம் திருக்குற்றாலநாதசுவாமி கோயிலின் சார்புக் கோயிலாகிய சித்திர சபையின் முன் மண்டபத்தில் 9-7-59 முதல் 11-7-59 வரை நடைபெற்றது. ஷை பயிற்சி முகாமை சென்னை இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் உயர்திரு எம். பக்தவத்சலம், பி.ஏ., பி.எல். அவர்கள் துவக்கி வைத்தார்கள். சென்னை இந்து அறநிலையத்துறை ஆணையாளர் உயர்திரு அ உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ், தஞ்சை துணை ஆணையாளர் திரு. ஏ. சக்கரை, பி ஏ, பி எல், திருநெல்வேலி மாவட்ட உதவி ஆணையாளர் திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி, திரு. ஓ. வி. அழகேசன் முதலானோர்களும் ஷை கூட்டத்திற்கு வந்திருந்து இறைபணியாளர்கள் கடமை, பொறுப்பு, முதலியவைகளைப் பற்றியும் அவர்கள் ஆலோசனை செய்து முடிவு செய்யவேண்டிய விஷயங்களையும் தெளிவாக எடுத்துரைத்து அவர்களுக்கு நல்வழி காட்டினார்கள்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழ் ஆராய்ச்சித் துறைத்தலைவர் திரு ஜி. சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ, பி.எல்., மதுரை தியாகராசர் கல்லூரி தமிழ்த்துறைப் பேராசிரியர் சித்தாந்த கலாநிதி திரு ஔவை துரைசாமிப்பிள்ளை, திரு. கே. ஆறுமுக நாவலர், ஸ்ரீவில்லிபுத்தூர் திரு. அலங்கார பட்டர் ஆகியோர் இந்து சமயச் சிறப்புப்பற்றிச் சொற்பொழி வாற்றினார்கள்.

திருநெல்வேலி கூட்டுறவு துணைப்பதிவாளர், திருநெல்வேலி மாவட்ட கால்நடை அலுவலர், திருநெல்வேலி மாவட்ட (வடக்கு) விவசாய அலுவலர், இந்துமத பரிபாலன சம்பந்தமான கணக்குகளின் நெல்லை மாவட்டத் தணிக்கையாளர் முதலிய பலதுறை அரசாங்க அதிகாரிகளும் ஷை பயிற்சி முகாமிற்கு வந்திருந்து ஆலோசனை கூறினார்கள். முடிவில் எல்லா இறைபணியாளர்களும் ஏக மனதுடன் திருநெல்வேலி சுவாமி நெல்லையப்பர் ஸ்ரீ காந்திமதியம்பாள் கோயில் இறைபணியாளர் திரு. டி. ஆர். பெரியநாயகம் பிள்ளை பி ஏ., எல்.டி. அவர்களைத் தலைவராகவும், திருக்குற்றால நாதசுவாமி கோயில் இறைபணியாளர் திரு. ஆர். இராமையா நாயுடு பி.ஏ., அவர்களைச் செயலாளராகவும் ஷை குழுவின் ஆலோசனைக்கு கொண்டுவரப்பட்டு பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இம்மாதிரியான பயிற்சி முகாம் இதுவே முதல் தடவையாக நடைபெற்றது.

# சைவம்

திரு. K. வச்சிரவேலு முதலியார் B.A., L.T.,

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

**(4) சைவாசாரியர்களது வருகை**

சிவாகம நெறியும், சிவவேதியர் மரபும் நம் தமிழகத்தே தொன்று தொட்டு நிலவி வருவன. சிவாகமப் பொருள் நிலையைப் பத்தாந்திருமுறையாகிய திருமந்திரம் ஒழுங்கு பட வைத்து உணர்த்துகின்றது. அன்றியும் திருஞானசம்பந்தர் தேவாரங்கள் சிவாகம விதிகளை நான்மறை விதிகளோடு முழுவதும் கொண்டுள்ளன என உணர்த்துகின்றார் நம்பியாண்டார் நம்பிகள்.

"பன்மறையோர் செய்தொழிலும்
பரமசிவா கமவிதியும்
நன்மறையின் விதிமுழுதும்
ஒழிவின்றி நவின்றனையே"

என்பது அவர் வாய்மொழி. **"தொகுத்தவன் அருமறை அங்கம், ஆகமம்", "ஆகமமாகிநின்றண்ணிப்பான் தாள்வாழ்க"** என்றாற் போன்ற தொடர்கள் தேவாரம் திருவாசகம் முதலியவற்றில் வருகின்றன. புகழ்த்துணை நாயனாரும், நம்பி ஆரூரரும் முதற்சைவர் எனப்படும் சிவ வேதியர் மரபைச் சார்ந்தவர்கள் என்பது பெரிய புராணத்தால் விளங்கும் உண்மை.

ஆயினும், மூலாகமங்கள் இருபத்தெட்டு, உபாகமங்கள் இருநூற்றேழு என்றாற் போன்ற வரையறைகளும், அவற்றின் வரலாறு பற்றிக் கூறப்படும் சில சம்பிரதாய உரைகளும், இவைபோல்வன பிறவும் பதினொன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்திற்குப் பின் தான் தமிழகத்தே பிரசாரஞ் செய்யப்பட்டுப் பரவின என்பது சரித்திரத்தால் உணரப்படுகிறது.

திரிலோசனசிவாசாரியர் இயற்றிய **"சித்தாந்த சாராவளி"** என்னும் வடநூல், ஆகமங்களின் நாற்பாதப் பொருள்களையும் வரிசைப்படுத்திச் சுருக்கமாகக் கூறுவது. அதன் **கிரியா பாதத்தின்** இறுதியில் சைவாசாரியர் வரலாறு கூறப்படுகிறது. அவ்விடத்தில் அந்நூலின் உரையாசிரியராகிய **அநந்த சிவாசாரியர் "இங்குப் பூர்வ கதை"** என ஒரு வரலாற்றுக் குறிப்பைத் தருகின்றார் :

"கோதாவரிக்கரையில், மந்திரகாளி என்ற ஒரு பட்டணம் உண்டு. அங்கு மந்திர காளீசுவரரைச் சூழ **ஆமர்த்தகம், புட்பகிரி, கோளகி, இரணபத்திரம்** என நான்கு சைவ மடங்கள் இருந்தன. அவற்றில் இருந்த சைவாசாரியர்கள் பலரை, இராசேந்திர சோழன், தான் கங்காஸ்நானம் செய்து திரும்பும்போது, உடன் அழைத்துப் போந்து, காஞ்சி மண்டலத்திலும் சோழ மண்டலத்திலும் தாபித்தான். அதனால், அவ்விடங்களிலும் வேறு எங்கும் சைவ சம்பிரதாயம் பரவிற்று" என்பது அக்குறிப்பு.

இதிற் கூறப்படும் மன்னன் **கங்கை கொண்ட சோழன்** என்னும் சிறப்புப் பெயர் பெற்ற **முதல் இராஜேந்திரன்** எனவும், இந்நிகழ்ச்சி கி. பி. 1023 என்னும் அளவில் ஏற்பட்டிருக்க வேண்டும் எனவும் கல்வெட்டுச் சான்றுகளோடு கலந்து நோக்கித் துணிகின்றார் திரு. T. V. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள். ஈண்டைய ஆராய்ச்சிக்கு உரிய பழைய நிகண்டு நூல்களாகிய திவாகரம், பிங்கலந்தை என்பவை வேதம், அங்கம், புராணம், உப புராணம், மிருதி என்பவற்றின் பெயர்களையும் தொகைகளையும் கூறுவன ஆகவும், ஆகமங்களின் பெயர்களையும் தொகையையும் அவ்வாறு எடுத்துக் கூறாமையும் கருதற்பாலது.

திருமந்திரத்தில் **ஆகமச் சிறப்பு** என்னும் பகுதியில் **"அஞ்சொடு இருபத்து மூன்றுள ஆகமம்"** என்னும் தொடர் காணப்படினும், பின், அப்பகுதியில் **"நவஆகமம் எங்கள் நந்தி பெற்றான்"** எனத் தொடங்கி, ஒன்பது பெயர் கள் கூறப்படுதலாலும், அவற்றுட் சிலவே மூலாகமங்கள் பெயராக இருத்தலாலும், **யாமளம்** என்னும் பெயரும் அவற்றுள் ஒன் ருக இருத்தலாலும், அத்தொடர்களைத் திரு மூலர் வாக்குத்தான் எனத் துணிதல் இய லாது. மேற்கூறியபடி பதினொன்றும் நூற் ருண்டின் முற்பகுதியில் தமிழகத்தே வந்த சைவாசாரியர்களும் அவர்கள் முன்னோர் களும் சைவபத்ததிகள், பிரகரண நூல்கள், ஆகமங்களுக்கு உரைகள் முதலியவற்றை இயற்றினர்கள். இவற்றால் சிவாகமநெறிபற்றிய விளக்கங்களை உணர முடிகிறது. பூசாமுறை கள், தீக்கைமுறைகள், பிரதிட்டை முறைகள் என்பவை சிற்சில வேறுபாடுகளுடனும், விஸ் தாரத்துடனும் இவற்றால் கூறப்படுகின்றன. இவை காரணமாக ஞானபாதப் பொருண்மை யில் வேறுபாடுகள் தோன்றிப் பாடாண வாதம், சிவசமவாதம், சிவசங்கிராந்த வாதம், நிமித்த பிரணபரிணமவாதம் என அகச்சம யங்கள் பல தோன்றலாயின. தீக்கையே முத்திக்கு நேர்ச்சாதனம், ஞானம் என்பது அதற்கு அங்கமே ஆகும் என்றாற் போன்ற பொருந்தாக் கொள்கைகளும் பரவின.

இங்ஙனம் ஆயினும், வடமொழியின் செல்வாக்குத் தமிழகத்தே மிகுந்த காலத்தில் சைவ நாயன்மார்கள் விளக்கியருளிய சிவ நெறியை வடமொழி வேத, ஆகம நெறி களோடு இணைத்துப் போற்றி வந்த பெருமை இச்சைவாசாரியர்களையே சாரும். இவர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள் **நீலகண்ட ஆசிரியர், கச்சியப்ப சிவாசாரியர், வாகீசமுனிவர்** என்போர் ஆவர். நீலகண்ட ஆசிரியர் **ஸ்ரீகண் டாசாரியர்** எனவும் வழங்கப்படுவர்.

### (i) நீலகண்ட ஆசிரியர்

இவர் வியாசசூத்திரம் எனப்படும் பிரம சூத்திரங்களுக்கு வேத ஆகம நெறிப்படி பாடி யம் வகுத்தருளிய சிவானுபூதிச் செல்வர். இவர் இன்ன காலத்து இன்ன இடத்துத் திரு வவதாரம் செய்தவர் என்பது தெரியவில்லை. ஆயினும் இவர் சங்கரர் காலத்திற்கு முற்பட் டவர் என்பதும், மேலே குறிப்பிட்ட ஆமர்த் தகம் முதலிய நான்கு சைவ மடங்களுக்கு அதிபதிகளாகிய சைவாசாரிய மரபைச் சார்ந் தவர் என்பதும் தெளிவு. கூர்மபுராணம் முத லியவற்றால் சிவசாரூபம் பெற்ற பதமுத்தர் கள் அவதாரம் என **யோகாசாரியர்கள்** பலர் கூறப்படுகின்றனர். அவர்களுள் முதற்கண் வைத்து எண்ணப்படுகின்றவர் **சுவேதாசிரியர்.** இச்சுவேதாசாரியரே ஸ்ரீகண்டாசாரியருக்கு ஆசிரியர் என்பது ஸ்ரீகண்டபாஷியத்தால் விளங்குகிறது. மேலும், வருணபத்ததி, சைவாகம ஞானம்பெற்ற தலையாய சைவா சாரியர்களைக் கூறுமிடத்து, "ஸ்ரீ துருவாசர் பைங்கலாசாரியர், உக்கிரச்சோதி, சத்திய சோதி, ஸ்ரீகண்டர், ஸ்ரீவிஷ்ணுகண்டர், வித்யா கண்டர், ராமகண்டர்" என வரிசைப்படுத்தி வைத்து, இவர்களைத் **தேசிகோத்தமர்கள்** எனப் போற்றுகிறது. இவ்வரிசையில் இவர்தம் பெயர் உள்ளது.

சங்கரர், இராமாநுஜர், மத்துவர் என்ற மூவரும் முறையே கேவலாத்துவிதம், விசிட் டாத்துவிதம், துவிதம் என்னும் மதங்களை ஆக்கி நிறுவினவர்கள். ஆதலினால், அவர்கள் மதாசாரியர்கள் என வழங்கப்பட்டனர்; அவர்கள் ஆக்கிய மதங்களும் திரிமதம் (மும் மதம்) என வழங்கப்படும். ஆனால் நீலகண்ட ஆசிரியர் எம்மதத்தையும் ஆக்க வந்தவர் அல்லர். மற்று, உபநிடதங்களின் பொரு ணிலையை வேதம் ஆகமம் என்பவற்றின் பொருள் ஒழுங்கின் பாற்படுத்தி விளக்கி யருளினவர் (He is not an author of an independent system, but an interpreter of the upanishads). மேலும், மதாசாரியர் மூவரும் சில உபநிடதங்களை மாத்திரம் முக்கியமானவை என வைத்துப் பிரமாணமாகக் கொண்டவர்கள். சிவாகமங் களைப் பொருளாகவே கொள்ளாதவர்கள். ஆனால் நீலகண்ட ஆசிரியர் வேதத்தின் கன்மகாண்டம் ஞானகாண்டம் என்னும் இரண்டையும் சிவாகமங்களையும் பிரமாண மாகக்கொண்டு அவற்றின் பொருணிலைகளை இணைத்துக் கோவைப் படக்கொண்டவர்.

இங்ஙனம் கொண்ட போதிலும், பரிணா மாத் (பரிணமித்தலால்) என வரும் வியாச சூத்திரம்பற்றி, முதல்வனது சிற்சத்திக்குப் பரிணமங் கூறுதலாலும், முதல்வனை உபா தான காரணமும் ஆவன் எனக் கொள்ளுத

லாலும் இவர் கொள்கை சிவாத்துவிதம் என வேறுக்வே வைத்து எண்ணப்படும்.

## (2) கச்சியப்ப சிவாசாரியர்

இவர் காஞ்சிமாநகரில் தோன்றி, தமிழும் வடமொழியும் வல்லவராய்த் திகழ்ந்தவர். "கந்தபுராணம்" என்னும் பெருங்காப்பியத்தை இயற்றியருளி நன்மக்களைச் சித்தாந்த சைவ நெறியில் நிற்குமாறு உதவினர். பெரிய புராணம் அனுபவ ஞானத்தின் அதிநுட்பங்களை விளக்கி நிற்பதுபோல, கந்தபுராணம் வேத ஆகமங்களாகிய கலைஞானத்தின் அதிநுட்பங்களை எடுத்து இனிது விளக்குவது ஆகும். இப்புராணம் வேதம், வேதாந்தம், ஆகமம், ஆகமாந்தம் என்பவற்றின் வரலாறு, பொருண் முடிபு என்பவற்றை உணர்வதற்குச் சிறந்த பிரமாண நூலாக விளங்கி வருகிறது. இவர் காலம் பதினொன்ரும் நூற்றுண்டின் இறுதி எனப்படுகிறது.

## (3) வாகீச முனிவர்


பன்னிரண்டாம் நூற்றுண்டின் இறுதியில் சென்னையை அடுத்துள்ள திருவொற்றியூரில் சதுரானன பண்டிதர் மடம் என்ப தொன்று விளக்கத்துடன் இருந்தது. அம்மடத்தில் தங்கியிருந்துகொண்டு, சோமசம்பு பத்ததி, ஆளுடைய நம்பி ஸ்ரீபுராணம் முதலியவற்றைப் பொதுமக்களுக்கு விளக்கிச் சொற்பொழிவு நிகழ்த்தி வந்தவர் வாகீசமுனிவர். இவரும் கச்சியப்பரைப்போல இருமொழியும் வல்லவர். சிவாகமங்களின் நாற்பாதப்பொருள்களையும் ஆராய்ந்து, நெறிப்பட உணர்ந்து, அப்பொருள்களைத் திரட்டிச் செந்தமிழ் மொழியில் ஞானமிருதம் என்னும் அருமந்த நூலாக ஆக்கியருளிய பெருமையை உடையவர். இந்நூலில் இக்காலத்து ஞானபாதம் பொருண்மை உணர்த்தும் பகுதி மட்டுமே உள்ளது. இது சங்கச் செய்யுட்களின் பெருமித நடையும் அமைப்பும் பெற்ற அகவற்பாக்களால் ஆயது.

இதுகாறும் சுருக்கமாக உரைத்த தமிழகச் சமய இயக்க வரலாற்றிலிருந்துபன்னிரண்டாம் நூற்றுண்டில் உபநிடதக் கருத்துக்கள், பிரம சூத்திரம்பற்றிய உரைகள், சைவாகமக் கருத்துக்கள் என்பவை பற்பல வேறுபாடுகளை உடையவையாய்த் தமிழகத்தே மிக்கு நிலவின என்பது விளங்கும். இதன் விளைவாக மக்கள் உள்ளங்களில் பெருங்குழப்பம் உண்டாக, அக்குழப்பம் நீங்கி மெய்ந்நெறியை மக்கள் தெள்ளிதின் உணர்ந்து ஒழுகி உய்தற் பொருட்டுத் திருவவதாரஞ் செய்தவரே மெய்கண்டதேவநாயனர் ஆவர். அவரும் அவர் வழி வந்தோரும் செய்துள்ள ஞான நூல்கள் மேற்கூறியபடி வேதம், உபநிடதம், சிவாகமம் என்பவற்றின் பொருள் முடிபுபற்றிய குழப்பங்களைக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் குறித்து நீக்கி உண்மை முடிவை விளக்குதல் உணரத்தக்கது.

இன்னும், இதுகாறும் கூறப்பட்ட வரலாற்றுமுறையில் வைத்து நோக்கும்போது, வேத ஆகமங்கள் முதல் நூல்கள் எனப்படினும், சித்தாந்த சைவத்தின் வரம்பைத் தெளிய உணர்தற்குப் பன்னிரு திருமுறைகளும், பதினான்கு மெய்கண்ட நூல்களுமே சிறந்த கருவிகளாய் அமையும் மிக வுயர்ந்த பிரமாண நூல்கள் ஆம் என்பது விளங்கும். அவற்றுள், பன்னிரு திருமுறைகள் நெறிப்பட்டு ஒழுகி உய்ய விரும்புவோர்க்கு நேரே எளிதின் உபகாரப்பட்டுப் போக மோக்ஷங்களை எய்துவிப்பன. மற்றைய மெய்கண்ட நூல்கள் தத்துவக் கொள்கையைக் கூறுமுகத்தான் நன்னெறியைத் இதுதான் என ஐயத்தின் நீங்கித் தெளியுமாறு உபகரிப்பன ஆகும். இவ்விருவகை நூல்களும் தமக்குள் முரணுதலின்றி (Without internal contradiction) தன்னிறைவு உள்ளனவாய் (self sufficient)ச் செம்பொருட்காட்சிக்கு இன்றியமையாத திருவருட் சுடர்களாகத் திகழ்வன ஆம்.

கண்ணுக்கினிய கருமுகில் வண்ணன் நாமமே
நண்ணுமின்

—பெரியாழ்வார்



தெப்பக்குளமும் மலைக்கோயிலும்

# திருச்சிராப்பள்ளி

நன்றுடையானைத் தீயதிலானை
நரை வெள்ளே
றொன்றுடையானை உமையொரு
பாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடை
யானைச் சிராப்பள்ளிக்
குன்றுடை யானைக் கூறஎன்
னுள்ளங் குளிருமே


— திருஞானசம்பந்தர்.

அரிச்சி ராப்பக லைவரா லாட்டுண்டு
சுரிச்சி ராதுநெஞ் சேயொன்று சொல்லக்கேள்
திருச்சி ராப்பள்ளி யென்றலுந் தீவினை
நரிச்சி ராது நடக்கும் நடக்குமே

— திருநாவுக்கரசர்.

சோழநாட்டில் காவிரிக்குத் தென்கரையில் உள்ளது திருச்சிராப்பள்ளி என்னும் சிறந்த சிவத்தலம். இதற்கு, திரிசிராமலை, திரிசிரபுரம், திரிசிரகிரி, முத்தலைமலை, பிரமகிரி என்ற பெயர்களும் உண்டு. திரிசிரன் என்ற அசுரன் இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றமையின் இப்பெயர் ஏற்பட்டதென்பர். இதை, 'மூச்சென்னி மடங்கலே றனையானுமை வரையிது' என்று திருவிளையாடற் புராணம் கூறுகிறது. இறைவன், தேவி, கணபதி இம் மூவர்களுக்கும் சிகரங்கள் உள்ளமையின் இப்பெயர் உண்டாயிற்றென்பாரும் உண்டு. சிலையில் (கல்லில்) குடைந்த பள்ளி (கோயில்) இருப்பதால் சிலைப்பள்ளி, சிலாப்பள்ளி, சிராப்பள்ளி என்ற பெயர் அமைந்ததாக ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். ஆதிசேடனுக்கும் வாயுதேவனுக்கும் ஏற்பட்ட சச்சரவில் வாயுவின் வன்மையால் திருக்கயிலாயத்திலிருந்து தள்ளப்பட்ட மூன்று சிகரங்களில் ஒன்று இது வென்றும், அதனால் தென் கயிலாயம் என்று பேர் பெற்றதென்றும் கூறுவர். மற்ற இரண்டும் திருக்காளத்தி, திருக்கோணமலை என்பன. இவ்வூர்த்தல புராணமான செவ்வந்திப் புராணத்தில்,

முன்னர் வீழ்ந்திடு சிகரிகா
ளத்தியா மொழிவர்
பின்னர் வீழ்ந்தது திரிசிரா
மலையெனும் பிறங்கல்
அன்ன தின்பிற கமைந்தது
கோணமா வசலம்
இன்ன மூன்றையுந் தென்றிசைக்
கயிலையென் றிசைப்பார்



மலைக் கோயிலின் முன்தோற்றம்

என்று விளக்கப்பட்டிருக்கிறது. அருணகிரிநாதர் ஒரு திருப்புகழ்ப்பாடலில் தென் கயிலாயம் என்றே கூறுகிறார். இவ்வூர்க் கோயிலிலுள்ள கல்வெட்டுக்களில் திருமலையென்றும், சிற்றம்பர் என்னும் திருச்சிராப்பள்ளி என்றும் குறிக்கப்பட்டிருக்கின்றது. சம்பந்தர் பாடிய பதினொரு பாசுரங்களிலும் சிராப்பள்ளி என்றே வருகிறது. அப்பர் பாடிய நான்கு பாடல்களில் மூன்றில் சிராப்பள்ளி யென்றும், ஒரு பாடலில் மட்டும் திருச்சிராப்பள்ளி யென்றும் கூறப்பட்டிருக்கிறது.

சிவபெருமான் மலைமேல் கோயில்கொண்டிருக்கிறார். அதற்கு மேலே உச்சிப்பிள்ளையார் கோயில் இருக்கிறது. பூமி மட்டத்திலிருந்து உச்சிப் பிள்ளையார் கோயில் 273 அடி உயரத்தில் இருக்கிறது, 417 படிகளேறிச் செல்லவேண்டும். கீழிருந்து 172 படிகள் ஏறிச் சென்றதும் இறைவன் கோயில் இருக்கிறது. அதுவரை படிகள் மேல் மண்டபங்களால் மூடப் பெற்றிருக்கின்றன.

மலையடிவாரத்தின் கோபுர வாயிலில் மாணிக்க விநாயகர் சந்நிதி இருக்கிறது. சில படிகள் மேலே சென்றால் மௌன மடம் இருக்கிறது. ஆதியில் இது சாரமா முனிவரால் ஏற்படுத்தப் பெற்றுப் பின்னர் சிதம்பர நாதத் தம்பிரான் சுவாமிகள் என்ற மௌன குருவால் பெருமை பெற்று விளங்கினமையின் அப் பெயர் வழங்கலாயிற் றென்பர். மலைமேல் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கு செவ்வந்தி நாதர், திருமலைக் கொழுந்தர், தாயுமானவர் என்ற திருநாமங்களுண்டு. சாரமாமுனிவர் செவ்வந்தி மலரால் பூசித்தமையின் செவ்வந்திநாதர் என்றும், மலைமேற் கொழுந்தாக இருப்பதால் திருமலைக் கொழுந்தர் என்றும், ஒரு பெண்ணின் பக்திக்காகத் தாயாக வந்து உதவியதால் தாயுமானவர் (தாயும் ஆனவர்) என்றும் பெயர்கள் உண்டாயின. தேவியின் திருப்பெயர் மட்டுவார் குழலம்மை. வடமொழியில் மாத்ரு பூதேசுவரர், சுகந்தகுந்தளாம்பிகை என்ற பெயர்கள் உண்டு. இத்தலத்து விநாயகர் செவ்வந்தி விநாயகர். மலையுச்சியில் இருப்பவர் உச்சிப்பிள்ளையார். இத்தலத்துப் பெருமானை வழிபட்டுப்பேறுபெற்றவர்களான இந்திரன், சடாயு, சப்தரிஷிகள், திரிசிரன், இராமர், அர்ச்சுனன், அனுமான், விபீஷணன், நாககன்னிகைகள், சாரமாமுனிவர், சோழன், இரத்தினாவதி, மௌனகுரு, தாயுமான அடிகள் இவர்களின் திருவுருவங்கள் அம்பிகை கோயிலுக்குப் போகும்வழியில் வரிசையாக வைக்கப்பட்டிருக்கின்றன.

இங்கு, இரண்டு குடைகோயில்கள், நூற்றுக்கால் மண்டபம், பதினாறுகால் மண்டபம், சித்திர மண்டபம் முதலியவை உள்ளன. அநப்பி என்ற பெண்மணியால் 17-ஆம் நூற்றாண்டில் ஆயிரக்கால் மண்டபம் கட்டப்பட்டு அழிந்து போயிற்றென்றும், அவ்



மலைவாசல் இராஜகோபுரம்

விடத்தில்தான் இப்போது மலைவாசல் கடைகள் இருக்கின்றன என்றும் கூறுகின்றனர்.

இத்தலத்தில் காவிரி, சிவகங்கை, சோமரோகணி, நன்றுடையான், தீயதில்லான் என்று ஐந்து தீர்த்தங்கள் இருக்கின்றன. காவிரி ஊருக்கு வடபால் ஓடுகிறது. சிவகங்கை கோயிலுக்கு வடமேற்கில் நாகநாதர் கோயிலுக்கு அருகிலுள்ளது, சோமரோகணி என்பது பிரமதீர்த்தம் என்றும் சொல்லப்படும். கோயிலுக்கு மேற்கில் நீராழி மண்டபத்துடன் விளங்கும் தெப்பக்குளம் ஆகும். 16–ஆவது நூற்றூண்டில் இங்கிருந்து ஆட்சி புரிந்த விசுவநாத நாயக்கரால் எடுக்கப் பெற்றது. பங்குனித் திங்களில் தெப்பத்திருநாள் நடைபெறுகிறது, நன்றுடையான், தீயதில்லான் இவ்விரண்டும் கோயிலுக்குக் கிழக்கிலும் தெற்கிலும் சற்றுத் தொலைவில் இருக்கின்றன. சம்பந்தர் தேவாரத்தில் தொடங்கும் ''நன்றுடையானைத் தீயதில்லானை'' என்ற சொற்றொடர்களால் இத்தீர்த்தங்களின் பெயர் அமைந்திருப்பது குறிக்கத் தக்கது.

இத்தலம் பலவகைகளிலும் பெருமை பெற்றது. காவிரியின் பாங்கரின் அமைந்திருக்கிறது. மலைக்கோயில் வெகு தொலைவு வரையில் தெரிகிறது, உச்சிப்பிள்ளையார் கோயிலிலிருந்து பார்த்தால் ஸ்ரீரங்கம், திருவானைக்கா கோயில்களும், காவிரி, கொள்ளிட நதிகளும், செந்நெல் வயல்களும், வாழைத் தோட்டங்களும், தென்னந் தோப்புகளும் கண்ணுக்கினிய காட்சியளிக்கின்றன. இக்கோயில் மூலலிங்கத்தின்மேல் ஆண்டு தோறும் பங்குனித் திங்களில் 23, 24, 25-ஆம் நாட்களில் மாலைச் சூரியனின் கதிர்கள் படுகின்றன. மலையின்மேலும் கீழும் இரண்டு குடைகோயில்கள் இருக்கின்றன. உறையூருக்குக் கிழக்கே உள்ள பெரிய மலை என்று அகநானூற்றில் ''கறங்கிசை விழவின் உறந்தைக்குணது...நெடும் பெருங்குன்றம்'' என்று கூறப்பட்டிருக்கிறது. சோழ மன்னர்களுக்குத் தலைநகரான உறையூர் இவ்வூரின் பகுதியாகவே இருக்கிறது. நாயக்க மன்னர்கள் தம் தலைநகரை மதுரையினின்றும் திருச்சிராப்பள்ளிக்கு மாற்றிச் சில காலம் ஆண்டுவந்தனர்.

இப்பதியில், தனகுப்தன் என்றொரு வணிகன் இரத்தினாவதி யென்ற மனைவியுடன் இல்லறம் நடத்தி வந்தான். இரத்தினாவதி மலைமேலுள்ள இறைவனை அன்புடன் தவறாமல் வழிபட்டு வந்தாள். அவளும் கருவுற்றுப் பேறுகாலம் அடைந்தாள். காவிரிப் பூம்பட்டினத்திலுள்ள தாய்க்கு இச்செய்தியை அறிவித்தாள். தாய் மகளுக்கு வேண்டிய மருந்து, எண்ணெய் முதலியவற்றை எடுத்துக்கொண்டு வந்தாள். காவிரியின் வெள்ளப் பெருக்கால் இக்கரைக்கு வர முடியவில்லை. பிரசவ நேரம் வந்தது; தாய் வந்து சேரவில்லை; பிரசவ வேதனையால் வருந்தும் இரத்தினாவதி வீட்டிற்கு சிவபெருமான் அவள் தாய்போல் உருக்கொண்டு வந்து அவளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தார். இரத்தினாவதி ஒரு ஆண்மகவைப் பெற்றாள். காவிரியில் வெள்ளம் வடியவே உண்மைத் தாய் வந்து சேர்ந்தாள். இறைவனாகிய தாய் மறைந்து விட்டார். அது முதல் இறைவனுக்குத் (தாயும்+ஆனவர்) தாயுமானவர் என்ற பேர் வழங்கலாயிற்று. இவ் வைபவம் பிரமோற்சவத்தில் ஐந்தாந்திருநாளன்று விழாவாகக் கொண்டாடப் பெறுகிறது.



இரத்தினாவதி


இவ்வூர்க்கோயில் இறைவன் மேற்கு நோக்கி யிருக்கிறார். இதற்கு ஒரு வரலாறு

கூறப்படுகிறது. சாரமா முனிவர் நந்தவனம் அமைத்து செவ்வந்தி மலரால் நாள்தோறும் இறைவனைப் பூசித்து வந்தார். உறையூர் பூவிற்பான் ஒருவன் இப்பூக்களைத் திருடி வந்தான். முனிவர் அப்போது உறையூரிலிருந்து அரசாண்ட பராந்தகச் சோழனிடம் முறையிட்டார். அரசன் அதைக் கவனிக்கவில்லை. இறைவன் கோபங்கொண்டு கிழக்கேயிருந்து மேற்கு முகமாகத் திரும்பினார். உறையூர் மண்மாரி பெய்து அழிந்தது.

தாயுமான அடிகள் இங்கிருந்த மௌன குருவிடம் ஞானோபதேசம் பெற்றுப் பல அருட்பாடல்களைப் பாடியருளினர். அவருடைய வரலாற்றை இவ்விதழில் வேறொரு இடத்தில் காணலாம்.

மலையுச்சியில் விநாயகப் பெருமான் கோயில் கொண்டெழுந்தருளி யிருப்பதற்கு ஒரு கதை வழங்குகிறது. இராமருக்கு அயோத்தியில் முடிசூட்டு விழா நடந்ததும் விபீஷணன் அவரிடமிருந்துபெற்ற அரங்கநாதர்சிலையை எடுத்துக்கொண்டு தெற்குநோக்கி வந்தான். கொள்ளிடத்திற்கும் காவிரிக்கும் இடையிலுள்ள பகுதியை அடைந்தான். ஜல உபாதை நீக்க வேண்டி யிருந்தது. விநாயகர் ஒரு அந்தணச் சிறுவனாக நின்று அச்சிலையை வாங்கினார்; விபீஷணன் வெளியே சென்று வருவதற்குள் கீழே வைத்துவிட்டார்; விபீஷணன் வந்து எடுத்துப் பார்க்க முடியாமற் போகவே மறைச்சிறுவனைத் துரத்தினான்; அவர் ஓடிவந்து மலையுச்சியில் அமர்ந்தார்; அவர் தலையில் குட்டினான்; விநாயகராக விளங்கியதும் அவரை வணங்கினான். அது முதல் அரங்கநாதர் ஸ்ரீரங்கத்தில் தங்கிவிட்டார். உச்சிப் பிள்ளையார் தலையிலும் குட்டுப்பட்ட வடு காணப்படுகிறது. விபீஷணன் பெருமாளை எடுத்து வந்ததைக் காட்டும் சிலை பதினாறுகால் மண்டபத் தூண் ஒன்றில் செதுக்கப்பட்டிருக்கிறது.

திருச்சிராப்பள்ளிமலையில் இரண்டு குகைக்கோயில்கள் உள்ளன. மலையைக் குடைந்து அமைக்கப்பட்டதால் குடைகோயில் என்றபேர் நாளடைவில் குகைக் கோயில் என்று வழங்கலாயிற்று. ஒரு குடைகோயில், செவ்வந்திநாதர் கோயிலுக்குமேல் உச்சிப்பிள்ளையார் கோயிலுக்குப் போகும் வழியில் இருக்கிறது. ஏழாவது நூற்றாண்டில் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த பல்லவ மன்னன் மகேந்திர வர்மன் சிவனடியாரான திருநாவுக்கரசரைத் துன்புறுத்தினான். பிறகு சமண சமயத்தினின்றும் அவன் சைவ சமயத்தைத் தழுவினான். திருவதிகையில் தன் பட்டமாகிய குணபரன் என்ற பெயரால் குணபரவீச்சரம் என்ற கோயிலை அமைத்தான். அவனே திருச்சிராப்பள்ளியிலுள்ள இக்குடை கோயிலை அமைக்கச் செய்தவன். இதில் கிரந்த, தமிழ்க் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. குடைகோயிலில் இலிங்கம் அமைத்து, தன்னுடைய உருவச் சிலையையும் நிலைபெறுத்தினான். நாம் செய்த தவக் குறைவால் அவை இப்போது காணப்படவில்லை. வடமொழிக் கல்வெட்டுக்கள் பாடல்களாகவுள்ளன. அவற்றில் காவிரியாற்றைத் தன் காதலியென்றும், குணபரன் இந்த இலிங்கத்தினால் பெற்ற விபட்ச விருத்தியிலிருந்து (சமண சமயத்திலிருந்து) திரும்பிய ஞானம் உலகத்தில் நீண்டகாலம் நிலைத்திருக்க வேண்டும் என்றும், இந்தச் சிவன் கோயில் அழியாத ஆபரணமாகவும், சங்கரனுடைய ஜோதி போன்றதும் ஆகும் என்றும், சத்தியசந்தனுடைய பூதவுடல் புகழ்பெற இது கல்தச்சனால் அமைக்கப்பட்டதென்




பல்லவர் குகை

றும், மலைமேல் இக்கோயிலில் சிவலிங்கத்தை அசையாமல் நிலை நிறுத்தித்தான் அழியாப் பதவியை அடைந்தான் என்றும் இன்னும் பலவாருகக் கூறப்பெற்றிருக்கிறது. இவையன்றி 104 செய்யுட்கள் அந்தாதியாகக் கல்லில் வெட்டப்பட்டுள்ளன. மற்ருெரு குடைகோயில் கீழே மலைவலம் வரும்வழியில் இருக்கிறது. இதை அமைக்கச் செய்தவன் மகேந்திரவர்மனின் மகனுன நரசிம்மவர்மன் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

இன்னும் சில கல்வெட்டுக்கள் இக்கோயிலில் காணப்படுகின்றன. மேல் குகைக் கோயில் மூன்ருவது தூணில் உள்ள ஒரு கல்வெட்டு சோழமன்னன் இராஜகேசரிவர்மன் (கி.பி. 985-1013) பதினுருவது ஆட்சியாண்டில் விக்கிரமசிங்க மூவேந்த வேளான் என்பவன் விளத்தூர் நாட்டு ஆலங்குடியில் நிலம் வாங்கி அதனை உறையூர்க்கூற்றத்துச் சிற்றம்பர் என்னும் திருச்சிராப்பள்ளியிலுள்ள கோயிலுக்கு அளித்தான் என்பதை அறிவிக்கிறது. அதே வரிசையில் ஒன்பதாவது தூணிலுள்ள மற்ருெரு கல்வெட்டு, பாண்டியாதிபதி மாறன் சடையன் என்ற வரகுணனையும், திருமலைப் பெருமானடிகளின் கோயிலையும் குறிக்கிறது. குகையின் கிழக்குச் சுவர்க் கல்வெட்டொன்று வரகுண பாண்டியன் பொன் வழங்கியதைத் தெரிவிக்கிறது. இன்னும் தாயுமானவர் கோயிலிலுள்ள ஒரு பாறைக்கல்வெட்டில் விஜய நகரமன்னன் வெங்கட தேவமகாராயன் சகம் 1539-ல், வீரப்ப நாயகன் நற்கதியடையும் பொருட்டுத் தானம் செய்தான் என்பதைச் சொல்கிறது.

திருச்சிராப்பள்ளித் தலத்தைப் பற்றிப் பாடியோர் பலர், திருஞானசம்பந்தர் பதினெரு பாடல்களையுடைய ஒரு பதிகம் பாடியுள்ளார். இறைவனைச் "சென்றடையாத திருவுடையான்" என்கிருர். திருநாவுக்கரசரின் நான்கு பாடல்களே கிடைத்துள்ளன. ஒன்றில் 'மட்டுவார்குழலாள்' என்று அம்பிகையின் பெயரைக் கூறுகிருர். தாயும் ஆனவர் ஈசன் என்பதை 'தாயுமாயெனக்கே தலைகண்ணுமாய் பேயனேனையும் ஆண்ட பெருந்தகை' என்று குறிக்கிருர். மாணிக்கவாசகர், 'தாயான ஈசற்கேசென்றூதாய் கோத்தும்பீ' என்றும், 'சிராப்பள்ளி மேவிய சிவனே



உச்சிப்பிள்ளையார் கோயில்

போற்றி' என்றும் கூறியிருக்கிருர். ஐயடிகள் காடவர்கோன் நாயனுர் இயற்றிய க்ஷேத்திரத் திருவெண்பா ஒன்று வருமாறு:

கழிந்தது நன்னெற்றுக் கட்டுவிட்டு நாறி
ஒழிந்த துடலிரா வண்ணம்—அழிந்த
திராமல்ஐயா கொண்டுபோ என்னுமுன் நெஞ்சே
சிராமலையான் பாதமே சேர்.

தாயுமானஅடிகள் பல பாடல்களை அருளியுள்ளார். பொய்யாமொழிப் புலவர் பல செய்யுட்கள் இயற்றியுள்ளார். அருணகிரிநாதர், சிரகிரியென்ற பெயரில் இரண்டு பாடல்களும், சிராப்பள்ளி என்ற பெயருடன் நான்கு பாடல்களும், சிராமலையென்றுவரும் ஏழு பாடல்களும், திரிசிரகிரி என்று பெயரமைத்து ஒன்பது பாடல்களும், தென் கயிலாயம் என்ற பெயர் வைத்து ஒரு பாடலும் ஆக இருபத்து மூன்று பாடல்களைப் பாடியிருக்கின்றனர். 'செம்பொனுற்றிகழ் சித்ரக் கோபுர மஞ்சிராப்பகல் மெத்தச் சூழ்தரு தென்சிராப்பள்ளி வெற்பிற்றேவர்கள் பெருமாளே' என்றும், 'சிகரகோபுர சித்திரமண்டப மகர தோரண ரத்நவலங்க்ருத திரிசிராமலை அப்பர்வணங்கிய பெருமாளே' என்றும், 'திரைகள் போலலை மோதிய சீதள குடக காவிரி நீளலை சூடிய திரிசிராமலை' என்றும், 'தெருளுறுமன்பர் பரவ விளங்கு திரிசிர

குன்று' என்றும் அப்பாடல்களில் கூறியுள்ளார். சோமசுந்தர முதலியார் இயற்றிய சிராமலை நாதர் அடைக்கலப் பதிகம், மட்டுவார் குழலம்பாள் சிந்தனைப் பதிகம் என்றவையும், திருச்குருகூர் ஞானசித்த சுவாமிகள் பாடல்களும் இத்தலத்தைப் பற்றியனவே. அருணசலபுராணம் இயற்றிய சைவ-எல்லப்ப நாவலர் இத்தலத்தின் புராணமான செவ்வந்திப் புராணத்தைப் பாடியுள்ளார். இது 11 சருக்கங்களும், 550 பாடல்களும் உடையது. மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் திரிசிரபுரம் யமக அந்தாதி யாத்துள்ளார்கள். சிராமலைக்கோவை, சிரகிரி உலா, அமிர்தம் சுந்தரநாத பிள்ளை யியற்றிய திரிசிராமலைக்கோவை இப்பதியைப்பற்றி எழுந்தனவே. மலைமேற் குகைக்கோயிலில் வேம்பையர்கோன் நாராயணன் என்பார் இயற்றிய கலித்துறை யந்தாதிப் பாடல்கள் 104 செதுக்கப்பட்டுள்ளன. அவைகளில் ஒன்று பின் வருமாறு :

நெஞ்சந் துணையுண்டு நீர்நிலத் துண்டு நிழலுண்டு
தஞ்சப் பெருக்குள தானஞ் சிராமலைச் சாரலுண்டு
துஞ்சுந் துணையுஞ் சிவனைத்தொழுது துறக்க
மெய்தார்
பஞ்ச நலியப் பலிதிரி வார்சிலர் பாவியரே.

இன்னும் ஸ்ரீதர வேங்கடேசுவர அய்யாவாள் வடமொழியில் ஸ்ரீ மாத்ரு பூதேஸ்வர சதகம் என்ற நூலைப் பாடியிருக்கின்றார்கள். வேறு சில நூல்களும், அந்தாதிகளும், தனிப்பாடல்களும் இத்தலத்தைப் பற்றியிருக்கின்றன.


தந்தை தாயுநீ யென்னுயிர்த் துணையுநீ
சஞ்சல மது தீர்க்க
வந்த தேசிக வடிவுநீ யுனையலால்
மற்றொரு துணை காணேன்
அந்த மாதியு மளப்பருஞ் சோதியே
ஆதியே யடியார்தம்
சிந்தை மேவிய தாயுமானவ னெனும்
சிரகிரிப் பெருமானே.

—தாயுமான அடிகள்.

## சாரல் மாநாடு,
## திருக்குற்றால நாதசுவாமி கோயில், திருக்குற்றாலம்

திருக்குற்றால நாதசுவாமி கோயிலின் ஆதரவில் சமய அறிவு பெருக்கவும் திருக்கோயில் தத்துவம் விளக்கவும், பக்தி வளர்க்கவும் உயரிய நோக்கங்கொண்டு 9-7-59 முதல் 15-7-59 வரை சாரல் மகாநாடு திருக்குற்றாலத்தில் நடைபெற்றது. இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு எம். பக்தவத்சலம், பி.ஏ.,பி.எல், அவர்கள் 9-7-59 வியாழனன்று மாலை 6–30 மணிக்கு மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார்கள். இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர் திரு அ. உத்தண்டராம பிள்ளை, ஐ ஏ எஸ்., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர்கள். பல அறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும் மேற்படி மாநாட்டில் பங்கெடுத்துக் கொண்டு சொற்பொழிவாற்றினர்கள். இன்னிசையரங்குகளும் நடைபெற்றன. இவ்விழாவில் கலந்து கொண்ட யாவரும் இக்கோயில் நிர்வாகிகளைப் பாராட்டினர்கள்.

தென்காசி, ஸ்ரீகாசிவிசுவநாத சுவாமி கோயிலில் சலவைக்கல்லில் பொறிக்கப்பட்ட தேவாரப் பாக்களை 6-7-59 தேதி சென்னை, அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் திறந்துவைத்தார்கள். நெல்லை மாவட்ட இந்துமத அறநிலையப் பாதுகாப்புத்துறை உதவி ஆணையாளர் திரு டி. எச். விவேகானந்தம் பிள்ளை, பி.ஏ.எல்.டி., அவர்களும் கலந்துகொண்டார்கள். திரு ஏ. சி. சண்முகநயினர் பிள்ளை, பி.ஏ.பி.எல் அவர்கள் நன்றிநவில விழா இனிது முடிவுற்றது.



கோயிலும் குளமும்



அருணகிரிநாதர்

# குமார வயலூர்

மணத்துக் கடம்பு புனைதோளா
வலத்துற் றெதிர்ந்து பொருசூரர்
சினத்திற் றுளைந்த வடிவேலா
நிலத்திற் பொலிந்த வயலூரா
வனத்திற் கிளர்ந்த மயில்வாகா
மனத்திற் புகுந்து க்ருபையீவாய்
குணத்திற் சிறந்த மகராசி
குறத்திக் கிசைந்த பெருமாளே

—அருணகிரிநாதர் திருப்புகழ்.

நம் நாட்டில் பெருமை பெற்ற முருகன் திருத்தலங்களில் ஒன்று குமார வயலூர் என்பது. இது திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே ஏழுகல் தொலைவிலுள்ளது. இங்கு செல்ல திருச்சிராப்பள்ளி கோட்டையிலிருந்து மோட்டார், பஸ், வண்டி முதலிய வசதிகள் உண்டு. இந்த ஊருக்கு வயலூர், ஆதிவயலூர், மேல வயலூர், வன்னிவயலூர், அங்கிபூஜிதபுரம், அக்கினீசுவரம் முதலிய பெயர்கள் வழங்குகின்றன. அருணகிரிநாதர் இத்தலத்தைப் பற்றிப் பாடிய திருப்புகழ்ப் பாடல்களில் வயற்பதி, வயலி, வயலிநகர், செய்ப்பதி, மேலை வயலை என்ற பெயர்களை ஆண்டிருக்கிறார்.

வயலூர் என்னும் பெயருக்கேற்ப வயல்களுக்கு நடுவே கோயில் அமைந்திருக்கிறது.



நடராஜர் சிவகாமி உற்சவமூர்த்தி

அக்கினீசுவரர் மூலவருக்குப் பின்புறம் தான் முருகன் சந்நிதி யிருக்கிறது. இது இத்தலத்திற் குத் தனிப்பெருஞ் சிறப்பையும் மகிமையையும் தருகின்றது. முருகப் பெருமானுக்கு முத்துக் குமாரசாமி, வயலூரன், வய லூர்க்குமரன், ஆதிவயலூரன், ஆதிக்குமரன் முதலிய பெயர்கள் வழங்குகின்றன. இக்கோயிலில் அருணகிரிநாதரின் திருவுருவ மும் இருக்கிறது.

கோயிலுக்குக் கிழக்கே உள்ள திருக்குளம் அக்கினி தீர்த்தம், சரவண தீர்த்தம், குமார தீர்த் தம், சக்திதீர்த்தம் என்ற பெயர் களால் வழங்கப் பெறுகின்றன. உய்யக்கொண்டான் ஆறு(சர்ப்ப நதி) இத்தலத்திற்கு ஒரு தீர்த் தம்தான். வன்னிமரம் தல விருட்சமாகவுள்ளது.

ஐம்முகச் சிவனும் அறுமுகச் சிவனும் ஒருங்கெழுந்தருளி யிருப்பது இத்தலத்தின் மகிமை யைக் காட்டுகின்றது. குமரக் கடவுள் இரண்டாவது முறை இங்கு அருணகிரி நாதருக்குக் காட்சியளித்துத் திருப்புகழ்ப் பாட அருள் செய்தார். திருவண் ணாமலையில் 'முத்தைத்தரு' என்று தொடங்கும் பாடலைப் பாடி நிர்விகற்ப சமாதியில் அமர்ந்துவிட்டார். அறுமுகப் பெருமான் 'வயலூருக்குவா' என் றருளினர். அருணகிரிநாதர் அவ்வாறே வய லூர் சென்று பொய்யாக் கணபதி திருமுன் "கைத்தல நிறை" என்று தொடங்கும் திருப் புகழ்பாடி, பின்னர் எண்ணிறந்த திருப்புகழ்ப் பாடல்களை ஓதியருளினர். வயலூரில் திருப் புகழ்பாட முருகன் அருள் செய்ததை,

கோயிலுக்கு முன்புறம் புதிதாக அமைக்கப் பட்ட ஐந்து நிலைகளையுடைய இராஜகோபுரம் அழகு செய்கிறது. அதற்கெதிரில் திருக் குளம் இருக்கிறது. கோயிலுக்கு ஒரு பிர காரம் தான். வாயிலுக்கு நேரே எழுந்தருளி யிருப்பவர் அக்கினீசுவரர்; கிழக்கு நோக்கிய சந்நிதி. அவருக்கு குமார பூஜிதர், ஆதிநாதர் என்னும் திருநாமங்களும் உண்டு. இக்கோயிலி லுள்ள கல்வெட்டுக்களில் விடங்கப்பெருமான், மகாதேவர், திருக்கற்றளிப் பெருமானடிகள், வயலூர் உடையார் மறப்பிலி முதலிய பெயர் கள் காணப்படுகின்றன. தேவியின் திருப் பெயர்கள் பூர்வஸ்திதிநாயகி, குமாரபூஜித நாயகி, ஆதிநாயகி என்பன. விநாயகர் திரு நாமம் பொய்யாக் கணபதி என்பது.

பக்கரை விசித்திரமணி
பொற்கலணை யிட்டநடை
பட்சியெனு முக்ரதுர கமுநீப
பக்குவமலர்த்தொடையும்
அக்குவடு புக்கொர்தொளை

ஆம்விதி நாடி அறம் செய்மின் அந்நிலம்
போம்விதி நாடிப் புனிதனைப் போற்றுமின்

—திருமூலர்

பிலி, உடையார் நாகநாத அம்பலவாணர் என்ற பெயர்கள் காணப்படுகின்றன. தேவியின் பெயர் வயலூர்ப் பிராட்டி என்று குறிக்கப்படுகிறது.

கோயில் பூஜைக்கும், நந்தாவிளக்கெரிக்கவும், நந்தவனம் திருத்தவும், பூமாலை தொடுக்கவும், திருப்பதிகம் (தேவாரம்) பாடவும், திருவமுது, கறியமுது, தயிரமுது, அடைக்காயமுது (வெற்றிலை பாக்கு), தேன், நெய், பால், பழம், சர்க்கரை முதலியவை நைவேத்தியம் செய்யவும் ஆகிய இவற்றிற்கு நிலம் முதலியன அளிக்கப்பட்ட செய்திகளைத் தெரிவிக்கின்றன. இக்கோயிலிலுள்ள நடராஜர் உற்சவமூர்த்தி மற்றக் கோயில்களிலுள்ளவை போன்றிராமல் இரண்டு பாதங்களையும் கீழே ஊன்றி நடனமாடும் பாவனையிலுள்ள சுந்தர தாண்டவம் ஆகும்; திருவாசிகை இல்லை. மற்ற முருகன் கோயில்கள் போன்று இங்கும் கிருத்திகை, சஷ்டி முதலான நாட்களில் மக்கள் திரளாகச் சென்று வழிபடுகின்றனர்.

"கருப்புவிலில் மருப்பகழி" என்று தொடங்கும் வயலூர் திருப்புகழ்ப் பாடலில் ஒவ்வோரடியிலுள்ள கடைசி வரிசைகளைச் சேர்த்தால் கீழ்வரும் பாடல் அழகுற அமைகிறது :-

கருத்திலை வீரகுசெய் மடமாதர்
கலக்குமோ கனமதில் மருளாமே
ஒருத்தனும் வகைதிரு வருளாலே
உணர்த்துநா ளடிமையு முடையயேனே
பருத்ததோ கையில்வரு முருகோனே
பரக்கவே யியல்தெரி வயலூரா
திருத்தமா தவர்புகழ் குருநாதா
திருக்கைவே லழகிய பெருமாளே.

—அருணகிரிநாதர்.

## சந்தாதாரர்களுக்கு

1958 அக்டோபர் முதல் 'திருக்கோயில்' இதழ்பெற்று வரும் சந்தாதார்களெல்லோரும் 1959 செப்டம்பர் முடிவுக்குள் அடுத்த ஆண்டிற்குரிய கையொப்பத்தொகை ரூபாய் பத்தும் சென்னை அறநிலைய ஆணையர் அலுவலகத்திற்கு மணியார்டர் மூலம் அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தா எண்ணையும், சரியான முகவரியும் குறித்தனுப்புமாறு வேண்டப்படுகிறது.

— இதழாசிரியர்.

# பத்து அவதாரங்கள்

## 2. ஆமையாய் அருள்புரிந்தது

(பி. ஸ்ரீ)

உலகங்களை ஆக்குதல், நிலையாகப் பொறுத்தல், நீக்குதல் ஆகிய முத்தொழிலும் திருமாலின் விளையாட்டு என்று கூறுவோர் அவதாரங்களை அத்திருவிளையாட்டின் பகுதியாகிய அருள் விளையாட்டு என்று கூறுகிறார்கள். 'எவர் விளையாட்டில் விருப்பமுடையவராய்ப் பத்துவித வேடங்கள் பூண்டு திருவரங்கத் திருக்கோயிலில் அன்பர்களால் வழிபடப் பெறுகிறாரோ, அந்த அரங்கநாதனும் அரங்கநாயகியும் அடியவர்களாகிய எங்களுக்கு மங்களத்தைச் சிறப்பாகச் செய்யட்டும்' என்று பொருள்படும் சுலோகத்துடன் ஸ்ரீ தசாவதார ஸ்தோத்ரம் என்னும் தோத்திர நூல் தொடங்குகிறது.

### தோத்திர நூலும் அவதார ரகசியமும்

இந்த நூல் திருவரங்கத்திற்கு அருகில் விக்கிரக ரூபமாக (அர்ச்சையில்) தரிசனம் அளிக்கும் தசாவதார மூர்த்திகளைக் குறித்துக் கூறுகிறது. இந்த அவதாரங்களில் திருவரங்க நாயகியும்—அதாவது மகாலட்சுமியும் கலந்து கொள்ளுகிறாளாம். தருமத்தைக் காப்பாற்றும் அவதாரப் பெரு நோக்கத்தில் பங்கு கொள்வதுடன், பல வேடங்களில் அவதாரமூர்த்தி பலவகை ரஸங்களை அனுபவிப்பதாக அபிநயிக்கும்போதும் அந்த லீலைகளுக்குத் தக்கபடி தானும் ரஸானுபவங்களை மேற்கொண்டு விளையாடுகிறாளென்றும் ஸ்ரீ தசாவதார ஸ்தோத்ரம் தெரிவிக்கிறது.

இந்தத் தோத்திர நூலை இயற்றிய பெரியார் ஸ்ரீ வேதாந்த தேசிகர். பத்து அவதாரங்களையும் செய்து முடிக்கும் எம்பெருமானின் 'கோயில்......புனல் அரங்கமே' என்ற பெரியாழ்வார் திருமொழிக்கு இணங்க வேதாந்த தேசிகரும் அரங்கநாதரே பத்துவகை வேடங்களைத் தரித்துக்கொண்டு 'அருள் விளையாட்டு' என்ற தமது நாடகத்தை ஆடுவதாகக் கூறியுள்ளார். அந்த நாடகத்தைக் காண வேண்டுமென்று பேராவல் கொண்ட ரஸிகர்களும் அறிஞர்களும் எம்பெருமானை வந்து தொழுகிறார்களாம். உலகிலுள்ள எல்லா மக்களுக்கும் தசாவதாரம் செய்யும் பெருமான் மங்களம் அருளுவார் என்ற பெரு நம்பிக்கை தொனிக்கிறது தசாவதார ஸ்தோத்ர நூலின் முதல் சுலோகத்திலேயே.

அறம் திறம்பலாகாது, அதை நிலை நிறுத்தவேண்டும் என்ற பெரு நோக்கம் மட்டும் அவதாரங்களின் முழு நோக்கமாகாது என்பது வேதாந்த தேசிகரைப் போன்ற வைணவ ஆசிரியர்களின் கொள்கை. அவதாரம் என்ற அறப்பெரு நாடகத்திலே ரஸிக அறிஞர்களும் பக்தர்களும் லீலா ரஸத்தையும் அனுபவிக்கிறார்களாம். உலக அன்னையாகிய மகாலட்சுமி தன்கணவருடன் தானும் அவதரித்து லீலா ரஸத்தை அனுபவிக்கிறாளென்றால், பக்த ரஸிகர்களும் அந்த அவதார நாடகங்களை ரஸித்து ரஸித்து ஆனந்தமான பக்தியனுபவங்களைப் பெற்றுப் பெரும்பேறு பெறுகிறார்கள் என்பது குறிப்பு,

முதலாவது அவதாரமாகிய மச்சாவதார நாடகத்திலும் ரஸிக்கத்தக்க அம்சங்கள் உண்டு. மச்சபுராணத்தில் சில அம்சங்களைப் பார்த்தோம்; 'தசாவதார ஸ்தோத்ர'மோ வேறொரு முக்கியமான வகையில் அறிஞர்களுக்கு ஸொனுபவ வழி ஒன்றைக் காட்டுகிறது.

வேதங்கள் கடல் நீரில் முழுகிப்போய் விட்டன. அந்த ஆதி மறைகளைத் தேடத் தொடங்குகிறார் மச்சாவதார நெடுமால். தாமும் நீரில் முழுகியாக வேண்டும். விசாலமான கண்களால் இங்கும் அங்குமாக எட்டுத் திசைகளிலும் பார்க்கிறார். செந்தாமரைக் கண்ணர் அல்லவா? அந்தப் பார்வை

யால் சமுத்திரத்தின் உட்பாகமெல்லாம் தாமரைக்காடு பூத்ததுபோல் விளங்குகிறதாம்.

கண்களை விழித்துத் தேடிக்கொண்டே உலாவும்போது அந்தப் பெருங்கடலில் அலைகள் தோன்றி ஒன்றோடொன்று மோதுகின்றன. அதனால் கடல்நீர் ஊஞ்சலாடுவது போல் ஏறுவதும் இறங்குவதுமாக இருக்கிறது. இந்த நிலைமையில் நீரில் உலாவுவது இந்தத் தெய்வ மீனுக்கு உல்லாசமாக இருக்கிறதாம். அறப்பெரு நோக்கம் முடிந்த பின்பும் ஊஞ்சலாடுவதுபோல் அலைகளினிடையே நெடுங்காலம் சஞ்சரித்துக்கொண்டிருந்தார் எம்பெருமான் என்ற கருத்தை வேதாந்த தேசிகர் வெளியிடக் காண்கிறோம். மச்சாவதார நாடகத்தில் இப்படி ரஸிகர்கள் அனுபவிக்கவேண்டிய அம்சமும் உண்டு என்பர்.

பெருமாளின் அருள்விளையாட்டாகிய அவதார நாடகங்களிலே அறப்பெரு நோக்கத்தை அறிந்துகொள்ளுகிறது அறிவு. பக்தியோ கடலின் அலைகளில் ஊஞ்சலாடுவது போன்ற இன்பத்தையும் மச்சாவதார நெடுமால் அனுபவித்தார் என்று அந்த நாடகத்தை ரஸித்து ரஸித்து அகக்கண் முன் கண்டு ஆனந்தம் அடைகிறது. அவதார ரகசியத்திலே இது ஒரு முக்கிய அம்சம் என்பர்.

### பக்த ரஸிகரும் கூர்மாவதாரமும்

பாற்கடலைக் கடைந்து அமிர்தத்தைத் திருமால் தேவர்களுக்கு வழங்கினார் என்பது ஒரு ரஸமான கதை. புராண உலகில் இது மிகவும் பிரசித்தமானது. என்றும் புதிதாய், என்றும் இனிமையாய் வீசும் தென்றலை அனுபவிப்பதுபோல் இந்தக் கதையைப் புராண ரஸிகர்கள் அனுபவிப்பார்கள். பாற்கடல் கடைந்த கதையின் பகுதிதான் கூர்மாவதார வரலாறு.

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைகிறார்கள். மந்தரமலையை மத்தாகக் கொண்டு கடைகிறார்கள். இந்த மலை-மத்து கடலில் அழுந்தி விடுகிறது. இதை மேலே கொண்டுவரப் பகவான் ஆமையாய் அவதரிக்கிறார். இப்படி அவதரித்து மலையைத் திருமால் முதுகில் தாங்கிக்கொள்ளவில்லையென்றால், பாற்கடலைக் கடைந்திருக்க முடியாது; தேவர்களுக்கு அமிர்தம் கிடைத்திருக்கவும் முடியாது. இதை இதயமாகக் கொண்டு கதை அழகாய் வளர்ந்திருக்கிறது. இக்கதை முழுவதும் பகவானுடைய பேரருளுக்குச் சான்றுதான்; கூர்மாவதாரம் உயிர் நிலைப் பகுதி.

பாற்கடல் கடைந்த கதை பாகவதம்முதலான புராணங்களில் காணப்படுவதுடன், கம்பராமாயணத்திலும் விசுவாமித்திரன் கூற்றாக அகலிகைப் படலத்தில் ஐந்தாம் செய்யுள் முதல் இருபத்தாறுவது செய்யுள் வரையில் சற்று விரிவாகவே காணப்படுகிறது. இக்கவிகளைச் செருகு கவிகள் என்று கூறுவோரும் உண்டு. எனினும் புராணப் போக்கின் சாரமாக அமைந்திருப்பதால், பக்தர்கள் இந்தப் பகுதியையும் கற்றும் கேட்டும் இன்புறுகிறார்கள். எனவே, இந்தக் கதையைச் சற்று விவரமாய்ப் பார்க்கலாம்.

உலக உருண்டைக்கு அப்பால் உள்ள காரண வைகுண்டம் என்ற லோகத்தில் தொடங்குகிறது கதை. ஒரு வித்தியாதரப் பெண் அந்த லோகத்திற்குப் போகிறாள். பரமபதமாகிய அந்த வைகுண்டமல்ல இந்த விஷ்ணுலோகம் என்று பக்தர்கள் சொல்லுகிறார்கள். அது மீளா உலகம்; அதை அடைந்தவர்கள் மீண்டு வருவதில்லை என்பர்.

காரண வைகுண்ட லோகத்திலே வந்து சேர்ந்த வித்தியாதரப் பெண்ணுக்கு இலட்சுமிதேவி காட்சி வழங்குகிறாள். வித்தியாதர மகள் யாழ்கொண்டு பாடித் தோத்தரிக்கிறாள். திருமகள் மகிழ்ந்து தன் கூந்தலிலிருந்து பூமாலை ஒன்றை எடுத்து அந்தப் பெண் கையில் வெகுமானமாய்க் கொடுக்கிறாள்.

அந்த மாலையைத் தன்னுடைய யாழிலே கட்டிக்கொண்டு அந்தக் கன்னிப்பெண் பிரமலோகத்திற்கு வருகிறாள். அங்கே வந்திருந்த துர்வாச முனிவர் இவளைப் பார்த்ததும் 'இலட்சுமிக்கு இசைபாடுகிறவள் இவள்' என்று தெரிந்துகொண்டு இவளை வணங்கித் துதிக்கிறார். வித்தியாதரப் பெண் மகிழ்ச்சியுடன் அந்தப் பூமாலையை 'இது உலக அன்னையின் முடியிலே சூடப்பெற்றது' என்று சொல்லி முனிவர் கையில் கொடுக்கிறாள்.

'இந்த மாலையைப் பெறுவதற்கு நான் என்ன தவம் செய்தேனோ!' என்று ஆச்சரியத்துடன் அந்த மாலையைத் தம்முடைய தலையில் சூடிக்கொள்கிறார் முனிவர். பிறகு இவர்

பிரமலோகத்திலிருந்து புறப்பட்டுத் தேவ லோகத்திற்கு வருகிறார்.

இந்தச் சொர்க்க லோகத்திலே தேவேந்திரன் வெள்ளை யானைமேல் பவனி வந்து கொண்டிருக்கிறான். அரம்பை, மேனகை, திலோத்தமை, ஊர்வசி ஆகிய தெய்வப் பெண்கள் நாட்டியம் ஆடுகிறார்கள். பேரிகை முதலான வாத்தியங்கள் பெண்கள் பாடும் மங்கல வாழ்த்துப் பாட்டைப் பிறர் கேட்க முடியாதபடி மறைத்து விடுகின்றன. இந்த ஆடம்பர மாட்சியைப் பார்க்கிறார் துர்வாச முனிவர்.

ஒரே மகிழ்ச்சி முனிவருக்கு இப்போது. நமக்குக் கிடைத்த பூமாலையை இந்தத் தேவ ராஜாவுக்கே கொடுத்து விடுவோம். மகாலட்சுமியின் அருளால் இவன் மேலும் செல்வ வாழ்வு பெற்று மகிழ்ந்திருக்கலாமே என்ற கருத்துடன் துர்வாசர் மாலையைத் தன் தலையிலிருந்து எடுத்து இந்திரன் கையிலே நீட்டிக் கொடுக்க முயல்கிறார். அவனோ வாங்கி ஐராவத யானையின் பிடரியில் வைக்கிறான். அந்த யானை பளிச்சென்று அந்த மாலையைத் துதிக்கையால் இழுத்துத் தன் காலின் கீழ்ப் போட்டுத் தேய்த்து விடுகிறது.

உடனே கோபம் வந்து விடுகிறது துர்வாசருக்கு. சாபம் கொடுக்கிறார் தேவேந்திரனுக்கு. தாம் அந்த மாலை பெற்ற வரலாறு கூறி, 'உன் வைபவம் கண்டு நான் மகிழ்ந்து கொடுத்த அற்புத மாலையை அலட்சியம் செய்துவிட்டாய்; ஆதலால் உன்னுடைய பெரிய நிதிகளும் வளங்களும் பாற் கடலிலே போய் மறைந்துவிடும்! நீ பெருந்துயர் அடைவாயாக!'' என்று சபிக்கிறார் முனிவர்.

பிறகு தேவர்கள் ஒன்றுகூடித் திருமாலைப் பிரார்த்திக்கிறார்கள். பாற்கடலைக் கடையுமாறு பெருமான் கட்டளையிட்டதும், 'இழந்த செல்வங்களை மீண்டும் பெற்றுக் கொள்வோம்' என்ற துணிவு வந்துவிடுகிறது தேவர்களுக்கு. அசுரர்களையும் கூட்டிக் கொண்டு கடலைக்கடையத் தொடங்குகிறார்கள்.

மந்தரமலையைப் பேர்த்துக் கொண்டு வந்து மத்தாக உபயோகித்துக் கொள்ளுகிறார்கள். மத்திலே கட்டிக் கடையக் கயிறுவேண்டாமா? வாசுகி என்ற பெரும் பாம்பைக் கடைகயிறாக உபயோகப்படுத்திக் கொள்கிறார்களாம். அசுரர்களும் தேவர்களும் வாசுகியின் தலைப்பக்கத்திலும் வாலின் பக்கத்திலும் அமர்ந்து கடைகிறார்கள்.

பாற்கடலைக் கடைவதற்குத் திருமாலும் உதவி செய்கிறார். தம்முடைய பேருருவம் கொண்டு தம்முடைய ஆயிரம் கைகளைப்பரப்பி மந்தரகிரியை அழுத்தும்போது அது கீழே அழுந்திப்போகிறது. உடனே ஆமை உருவம் கொண்டு முதுகின் மேலே மலையைத் தாங்கிச் சுழலும்படி செய்துகொள்கிறார். இதுதான் கூர்மாவதார நிகழ்ச்சி.

பாற்கடலைக் கடைந்து தேவர்கள் இழந்த பொருள்களையும் அமிர்தத்தையும் பெற்றுக் கொள்வதற்காகத் திருமால் பேருருவம் கொண்டும் உதவி செய்கிறார்; அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் பிணக்கம் ஏற்பட்டதும் அசுரர்களை மயக்கும் மோகினி உருவம் கொண்டும் தேவர்களுக்கு உதவி அமுதம் கொடுக்கிறார். இதற்கு மத்தியில் மந்தரமலை அமிழ்ந்து போகாமல் ஆமை யுருவத்தில் அதைத் தாங்கியும் இருக்கிறார். இப்படி மூன்று உருவங்கள் கொண்டும் உதவிபுரிந்தும் ஆமை யுருவம் தரித்தது ஒன்றே அவதார நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது.

> திறல்கொள் ஆமையாய்
> முதுகினில் மந்தரம்
> திரிய

என்பது கவிஞன் வாக்கு.

இந்தக் கூர்மாவதாரக் கதை பாற்கடலில் தோன்றிய பொருள்களைத் தேவர்கள் பலரும் பங்கிட்டுக் கொள்வதுடன் முற்றுப்பெறுகிறது. ஐந்து தருக்களும் சிந்தாமணி முதலான நிதிகளும் தேவேந்திரனுக்குக் கிடைக்கின்றன. புஷ்பகம் முதலான பழைய பெரிய ஐசுவரியங்கள் குபேரன் முதலான தேவர்களுக்குக் கிடைக்கின்றன. அமிர்தம் தேவர்களுக்குக் கிடைக்கிறது. அமிர்தம் பிறந்த பாற்கடலிலேயே விஷம் பிறக்க, இந்த ஆலகால விஷத்தைச் சிவபெருமான் பானம் செய்து தேவர்களையெல்லாம் காப்பாற்றிவிடுகிறார். பாற்கடலில் தோன்றிய சந்திரனையும் சிவபெருமான் தரித்துக்கொள்கிறார். திருமா

லுக்குஇதே கடலில் தோன்றிய திருமகள் மணமாலை சூட்டுகிறாள்.

### கதையின் உட்பொருள்

இந்தக் கதையிலே, விஷபானம் செய்து சிவபெருமான் நீலகண்ட மூர்த்தியாகி உலகங்களைக் காப்பாற்றினார் என்பது சிவபெருமானுடைய பெருமையையும் தியாகத்தையும் விளக்கும் பகுதியாகும். திருமால் திருமகளை மணந்துகொண்டாரென்பது திருமாலின் பெருமையைக் குறிக்கும் பகுதி. பாற்கடல் கடைய உதவியதும், அமிர்தத்தைத் தேவர்களுக்கு வழங்கியதும் திருமாலின் பெருமைக்கும் கருணைக்கும் சான்றாகக் காட்டப்பெறும் கதைப் பகுதிதான்.

ஆனால் இந்தக் கதையின் முக்கியமான உட்பொருள் என்ன என்பது குறித்து வைஷ்ணவப் பேரறிஞர்கள் ஒரு பெருங் கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். கிடந்த அமுதமாகிய பெருமாளை விட்டுக் கடைந்த அமுதத்தையல்லவா தேவர்கள் விரும்பினார்கள். தேவ சரீரத்தை ஊட்டி வளர்த்துக்கொண்டு நரை திரை மூப்பு இல்லாமல் போகங்களை அனுபவிப்பதே பெரிது எனக் கருதிவிட்டார்கள். பக்தர்களோ கிடந்த அமுதத்தையே (பள்ளிகொண்ட பெருமாளையே) உண்ணும் அமுதத்தைக் காட்டிலும் உயிரைக் காட்டிலும் மேலாக மதிக்கிறார்கள்.

கிடந்த அமுதுதான் கடைந்த அமுது கிடைப்பதற்கே காரணம். பேருருவம்கொண்டும், மோகினி வடிவம் கொண்டும், எல்லாவற்றுக்கும் மேலாகக் கூர்மாவதாரம் செய்தும் பகவான் உதவி செய்யவில்லையென்றால் தேவர்களுக்கு எப்படி அமுதம் கிடைத்திருக்கும்? எனினும் தேவர்கள் தங்கள் செல்வங்களையும் சுகபோகங்களையுமே பெரிதாகக் கருதிவிடுகிறார்கள்.

பக்தர்களோ பள்ளிகொண்ட பெருமாளாகிய அமிர்தத்தையே நினைத்துப் பார்க்கிறார்கள்; சரணாகதி செய்கிறார்கள். இப்பெருமானது திருவிளையாட்டை ரஸித்து அனுபவிக்கிறார்கள். திருவிளையாட்டின் பகுதியான அவதார நாடகங்களைச் சிறப்பாக ரஸித்து அனுபவிக்கிறார்கள். இந்த அவதார நாடகங்களில் முதுகிலே மந்தரமலையைச் சுழலவிட்டுக்கொண்டு அதற்கு ஆதாரமாகக் கிடந்த அந்தத் 'திறல்கொள் ஆமை'யும் பக்த ரஸிகர்களின் ரஸானுபவத்திற்கு ஓர் இலக்காவதைக் காண்கிறோம்.

### கூர்மாவதார உட்பொருள்

மந்தரமலை முதுகின்மீது சுழலுகையில் ஆமை வடிவ நெடுமாலுக்குத் தினவு சொரிவதுபோல் இன்பமாக இருந்தது என்கிறார் வேதாந்த தேசிகர் தமது தசாவதார ஸ்தோத்ரத்திலே. அதனால் கூர்மாவதாரமூர்த்திக்கு உறக்கம் வந்ததாம். உறங்குகையில் மூச்சுக் காற்றுக் கிளம்பியதாம். அதனால் கடல்நீர் உயர்வதும் தாழ்வதுமாயிருந்ததாம். பள்ளிகொண்டிருக்கும் பெருமாளுக்கு, 'திறல்கொள் ஆமை'யின் மூச்சுக் காற்றால் கிளம்பிய நீர்க்குமிழிகள் சமுத்திரத்தை ஒரு எந்திரப்படுக்கை அல்லது ஊஞ்சற் கட்டில் போல் செய்துவிட்டனவாம். அந்த மூச்சுக்காற்று—பள்ளிகொண்ட பகவானுக்கு இன்பம்அளித்த மூச்சுக்காற்று—உலகத்தைக் காப்பதாக, நம்மைக் காப்பாற்றுவதாக என்று தசாவதார ஸ்தோத்திரத்தின் மூன்றாவது சுலோகம் முற்றுப்பெறுகின்றது.

'திறல்கொள் ஆமை'யின் மூச்சுக்காற்று அந்த ஆமையுருவை விட்டு மறுபடியும் சர்ப்ப சயனமூர்த்தி ஆகியும் ஓய்ந்தபாடில்லை, இன்றைக்கும் ஓயவில்லை என்று கவிதையுள்ளம் கொண்டு குறிப்பிடுகிறார் ஸ்ரீ வேதாந்த தேசிகர். பக்தியே நமது மூச்சுக்காற்று என்பது பக்தி மதம். கூர்மாவதார மூர்த்தியின் மூச்சுக்காற்று அறிதுயில் அமர்ந்த மூர்த்திக்கும் இன்பம் அளித்தது போல் நமக்கும் இன்பம் அளிக்கும் என்பது வைணவர்களின் நம்பிக்கை.

எந்தப் பிறவியையும் பகவான் அற்பமாக எண்ணுவதில்லை என்ற பாடத்தையும்போதிக்கிறது இந்த அவதார வரலாறு. பணி செய்வதிலும் தியாகம் செய்வதிலும் எந்த நிலையும் அற்பமானதன்று என்ற கருத்துப் புதையலையும் இங்கே காணலாம். எல்லாவற்றுக்கும் மேலாக, கூர்மாவதாரத்திலும் எப்பெருமான் திருவிளையாடல் என்ற அந்த லீலாரஸத்தை அனுபவிப்பதே பக்திபெறக் கூடிய பெரும்பேறு என்பது வைணவப் பெரியார்களின் தேர்ந்த கொள்கை.

## தொண்டைநாட்டுத் தலயாத்திரை

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய பிரசார நிலையத்தின் ஆதரவில் தொடங்கியிருக்கும் தொண்டைநாட்டுத் தலயாத்திரையில் மூன்றாவது தலமாக திருஅச்சிறுப்பாக்கத்தில் வழிபாடும், சமயச் சொற்பொழிவுகளும் 5-7-59 ல் நடைபெற்றன. பெரும்பேறு முருகன்கோயில் வழிபாடும், திருப்புகழ்ப் பாராயணமும் நடைபெற்றன. அச்சிறுப்பாக்கம் ஆட்சீசர் ஆலயத்தில் வித்வான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையில் திருவாளர்கள் சுப்பிரமணியம், நடராஜன், ச. சிவகுமரன் எம்.ஏ., ஜி. கலியாணம் எம்.ஏ, புலவர் முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல். திருமதி. இராஜரத்தினம் அம்மையார் எம். ஏ. எல். டி. முதலியோர் சொற்பொழிவாற்றினார்கள். திரு. வரதா ரெட்டியார் பி. ஏ., பி. எல். நன்றி கூறினார்கள். இவைகளுக்கான ஏற்பாடுகள் செய்த திரு. கே. வி. இலட்சுமிபதி ரெட்டியார், தருமகர்த்தர்கள் திரு. வீரா ரெட்டியார், திரு. பெரியசாமி செட்டியார், நிர்வாக அதிகாரிகள் இவர்களின் முயற்சி பெரிதும் போற்றத்தக்கது. முன்னால் வட திருமுல்லைவாயில், திருவேற்காடு யாத்திரை நடந்துவிட்டது. 2-8-59-ல் பாடி என்ற திருவலிதாயத்திற்கு யாத்திரை நடக்கும். ஒவ்வொரு ஆங்கில மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை இவ்வித யாத்திரை நடைபெறும். அன்பர்கள் கலந்துகொள்ளலாம்.

✦ ✦ ✦ ✦

கும்பகோணம், ஸ்ரீ நாகேசுவரசுவாமி கோயில் திருமஞ்சன வீதியில் தனது பக்கத்தில் ஸ்ரீ மகாலக்குமியைக் கொண்டவராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஜெகந்நாத பிள்ளையார் திருக்கோயிலுக்கு 28-5-59-ல் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடந்தது. இதைத் தொடர்ந்து நடந்த மண்டலாபிஷேகம் 15-7-59 தேதி பூர்த்தியடைந்து அன்று இரவு ஸ்ரீ முருகதாசர் அவர்களுடைய பஜனையுடன் சிறப்பாக முடிவுற்றது.

✦ ✦ ✦ ✦

திருநெல்வேலி. ஸ்ரீ கைலாசநாத ஸ்வாமி கோயிலில் 29-6-59 பன்னிரு திருமுறைக் கோயில் திறப்புவிழாவும். திருமுறை விழாவும் உயர் திரு எஸ். எஸ். அருணாசலம் பிள்ளை அவர்கள் (கணபதி ஆலை அதிபர்-திருநெல்வேலி) தலைமையில் நடைபெற்றது. திருமுறைக்கோயிலை யானையின்மேல் வைத்து, பேட்டை அன்னதான விநாயகர் பாடசாலை மாணவிகள், நெல்லை திருப்புகழ் சபை திரு முருகதாஸ் அவர்கள் குழுவினர் தேவார இன்னிசைப் பாடல்களுடன் இரத வீதிகளைச் சுற்றிவந்து ஸ்ரீ நடராசர் சந்நிதியில் திருமுறைக் கோயில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. திருநெல்வேலி மாவட்ட அறநிலைய பாதுகாப்புத்துறை உதவி ஆணையாளர், உயர்திரு டி. எச். விவேகானந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி., அவர்கள் பன்னிரு திருமுறைக் கோயிலைத் திறந்து வைத்து திருமுறைகளின் சிறப்பைப்பற்றிச் சொற்பொழிவு ஆற்றினார்கள். பேட்டை ம.தி.தா. இந்துக் கல்லூரி தலைமைத் தமிழ் விரிவுரையாளர் ராவ்சாகிப் வித்வான் உயர்திரு கு. அருணாசலக் கவுண்டர், மீனாட்சிபுரம், நகர்மன்ற மகளிர் உயர்நிலைப் பள்ளி வித்துவான் திருமதி ந. பாலம்மாள், நெல்லை ம.தி.தா. இந்து உயர்நிலைப் பள்ளி, திருக்குறள் மணி வித்துவான் உயர்திரு அ.க. நவநீதகிருட்டினபிள்ளை ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

✦ ✦ ✦ ✦

## பீட்டர் பாண்டியன்

மதுரையைத் தலைநகராகக்கொண்டு பலநூற்றாண்டுகள் பாண்டிய மன்னர்கள் ஆட்சிபுரிந்தனர். அவர்கள் குலதெய்வமாக மீனாட்சியம்மையை வணங்கிவந்தனர். பின்வந்த நாயக்க அரசர்களும் அப்படியே செய்தனர். பல ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலேய ஆட்சியின்கீழ் மதுரையில் ரூஸ் பீட்டர் என்ற வெள்ளையர் கலெக்டராக இருந்தார். ஒரு நாள் அவர் மாளிகையில் அமர்ந்து அரசாங்க அலுவல்களைப் பார்த்துக்கொண்டிருந்தார். வெளியிலிருந்து யாரோ ஒரு சிறு பெண் அவரைக் கூப்பிட்டதுபோல் காதில் விழ, அவர் இருந்த அறையை விட்டு வெளியே வந்தார். அவ்வளவில் அவர் உட்கார்ந்திருந்த கட்டிடத்தின் மேல்பாகம் இடிந்து விழுந்தது. கலெக்டர் உயிர்தப்பினார். தம்மை வெளியிற் கூப்பிட்டது மீனாட்சியம்மையாகத்தான் இருக்கவேண்டும் என்று அவர் மனதில்பட்டது. அங்கயற்கண்ணியின்பால் அவருக்கு அளவிறந்த பக்தி ஏற்பட்டது. அதற்கு அறிகுறியாக தங்கத்தில் நவரத்னங்கள் பதித்த இரண்டு திருஅங்கவடிகள் (Stirrups) செய்து மீனாட்சியம்மை கோயிலுக்கு அளித்தார். இன்றும் அத்திருவாபரணம் கோயில் கருவூலத்திலிருக்கிறது. என்னே ஒரு வெள்ளையரின் பக்தி! என்னே ஆலவாய்ச் சொக்கரின் அருகமைந்துள்ள அங்கயற்கண்ணியின் பேரருள்! மக்கள் இந்த வெள்ளைக்காரக் கலெக்டர் துரையைப் பீட்டர் பாண்டியன் என்ற பெயரால் வழங்குவது மிகவும் பொருத்தமுடையதன்றோ?

# உறையூர்

## கமலவல்லித்தாயார் சந்நிதி

*கோழியும் கூடலும் கோயில்*
*கொண்ட கோவலரே*
*யொப்பர் குன்றமன்ன*
*பாழியம் தோளுமோர்*
*நான்குடையர் பண்டிவர்*
*தம்மையும் கண்டறியோம்*
*வாழியரோ விவர்வண்ண*
*மெண்ணில் மாகடல்*
*போன்றுளர் கையில்வெய்ய*
*ஆழியொன் றேந்தியோர்*
*சங்குபற்றி யச்சோ*
*வொருவ ரழகியவா*

—திருமங்கையாழ்வார்

"ஊர் எனப்படுவது உறையூர்" என்பது பழமொழி. இவ்வூர் திருச்சிராப்பள்ளி கோட்டை இரயில் நிலையத்திற்கு மேற்கே ஒரு கல் தொலைவிலுள்ளது. திரு (இலட்சுமி) ஆகிய பெரிய பிராட்டியாரின் அம்சமாய் ஸ்ரீகமலவல்லி நாச்சியார் இந்தபதியில் நந்த சோழனுக்குத் திருமகளாய் அவதரித்து உறைந்த காரணத்தால் திருஉறையூர் என்னும் பெயர் பெற்றது. உரகபுரம், நிசுளாபுரி, உறந்தை என்ற வேறு பெயர்களும் இத்தலத்திற்கு உண்டு. சோழமன்னன் ஒருவன் யானையின்மீது உலாப் போந்தபோது இவ்விடத்தே கோழி ஒன்று எதிர்த்துப் போராடியதால் அரசன் அங்கு ஒரு நகரை யேற்படுத்தினான். ஆதலின் அந்நகர்க்குக் கோழி, கோழியூர் என்ற பெயர்களும் உண்டாயிற்று. இச்செய்தியைச் சிலப்பதிகாரத்தில் "முறஞ்செவி வாரணமுன்சம முருக்கிய புறஞ்சிறை வாரணம்" என்று கூறப்பட்டிருக்கிறது. பல சங்க நூல்களிலும் இந்நகரின் பெருமை சொல்லப்பட்டிருக்கிறது.

நந்தசோழன் என்பானுக்கு மகப்பேறில்லாக் குறையைத் தீர்க்க ஸ்ரீதேவி அவனுக்கு மகளாய் இத்திருப்பதியின் கண்ணே அவதரித்தார். அத்திருமகளுக்கு நந்த சோழன் கமலவல்லி என்ற திருநாமம் சூட்டி வளர்த்து வந்தான். மணப் பருவத்தை யடைந்த அப்பெண் தோழியர்களுடன் பூக் கொய்யும் பொருட்டு நந்தவனம் சென்றார். ஸ்ரீரங்கநாதன் குதிரைமேல் ஏறி அவ் வழியே வந்து அவர் முன்தோன்றிச் சென்றார். "என்னரங்கத்தின்னமுதர் குழலழகர் வாயழகர் கண்ணழகர்" என்று கூறி அவர் வடிவழகில் கமலவல்லி ஈடுபட்டார். அம்மையாரின் நிறையழிவைத் தெரிந்த அவர் தாய் நந்தசோழனிடம் தெரிவித்தார். சோழனும் கமலவல்லியை நோக்கி, "மையல் செய்து உன்னை மனம் கவர்ந்தவன் யாரம்மா" என்று வினவ, கமலவல்லியும் "மையல் செய்து என்னை மனங்கவர்ந்தவன் தண்புனல்சூழ் திருவரங்கத்துள்ளான்" என்று தன்னைத் திருவரங்கநாதனுக்கு விரைவில் மணம் புணர்விக்குமாறு உணர்த்தினார். நந்தசோழனும் கமலவல்லியைத் திருவரங்கநாதனுக்குக் கன்னிகாப்பிரதானம் பண்ணிக் கொடுத்துத் திருக்கல்யாண விழாவை உறையூரில் சிறப்பாக நடத்தி வைத்தான்; கமலவல்லியைப் பல சீர்வரிசைகளுடன் திருவரங்கத்துக்கு அனுப்பினான்; கமலவல்லி கோயிலுக்கு வந்து திருமணத்தூணுக்குள் புகுந்தவுடன் அரங்கநாதன் திருவடிகளில் ஐக்கியமாகி மறைந்து போனார். தமக்கு வேறுசந்ததி இல்லாததால் நந்தசோழன் தன் முழுச் சொத்துக்களையும் அரங்கநாதனுக்கு அளித்து, மண்டபம், கோபுரம், பிரகாரம் இவைகளையும் அமைத்தான். உறையூரில் அழகிய மணவாளனும் கமலவல்லியும் திருவரங்கத்தை நோக்கி வடக்கு முகமாக எழுந்தருளியுள்ளனர். கோயில் வாயிலும் வடபுறம்தான் இருக்கிறது. அரங்கநாதனை அழகிய மணவாளன் வடக்கே திருமுகமண்டலத்துடன் நின்ற திருக்கோலமாய்க் காட்சி யளிக்கிறார். நாச்சியாரான கமலவல்லி பெருமாளுக்கு வலது பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறார். தாயார் அரங்கநாதனை மணந்துகொண்ட இடமாத

லால் கல்யாண அவசரமாய் சேவை சாதிக்கிருர். வாசலட்சுமி, உறையூர்வல்லியென்ற திருநாமங்களும் தாயாருக்கு உண்டு.

கோயிலில் சேனைமுதலியார், ஆஞ்சநேயர், கருடாழ்வார், நம்மாழ்வார், உடையவர், திருப்பாணுழ்வார் முதலியவர்கள் சந்நிதிகளும், வசந்தமண்டபம், ஊஞ்சல் மண்டபம், தெப்பத் திருநாள் மண்டபம், வெள்ளிக்கிழமை மண்டபம், அர்த்தமண்டபம், மகாமண்டபங்களும் அமைந்துள்ளன. இங்குள்ள விமானம் கல்யாண விமானம் என்பர். குடமுருட்டி ஆறும், கல்யாண தீர்த்தமும் இப்பதியின் தீர்த்தங்கள். இரவி தர்மராஜனுக்கும் முப்பத்து முக்கோடி தேவர்கட்கும் பிரத்தியட்சம்.

ஆழ்வார்களால் மங்களசாசனம் செய்யப் பெற்ற 108 திவ்விய தேசங்களில் திருக்கோழி என்ற உறையூர் ஒன்று. திருமங்கையாழ்வார் ஒரு திருப்பாசுரம் அருளியுள்ளார். திருப்பாணுழ்வார் அவதரித்ததும் இத்திருப்பதியிலேதான். நிசுளாபுரி மாகாத்மியம், திவ்விய சூரிசரிதம், கோயிலொழுகு, இலட்சுமிகாவியம், ஸ்ரீரங்கராஜ சரிதபாணம் என்ற நூல்களில் உறையூரின் பெருமையெல்லாம் கூறப்பட்டிருக்கிறது.

சிறப்பு உடைய செல்வம் திருப்பதிகள்போல
மறப்பு உடைய நாயேன் மனத்துள்
---உறப்போந்து

அறம் தையாநின்ற அரங்கா! திருவாழ்
உறந்தையாய்! இங்கு உறைந்தது ஓது.
— திவ்வியகவிபிள்ளைப்பெருமாளையங்கார்

நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி.

## பஞ்சவர்ணேசுவரர் கோயில்

நீருளா ரும்மலர் மேலுறை
வானெடு மாலுமாய்ச்
சீருளாருங்கழல் தேடமெய்த்
தீத்திர ளாயினான்
சீரிள லங்கொளிர் தென்னவன்
செம்பியன் வில்லவன்
சேருமூக் கீச்சரத் தடிகள்செய்
கின்றதோர் செம்மையே.
— திருஞானசம்பந்தர்

உறையூர் ஆழ்வாரால் மங்கள சாசனம் பெற்ற திவ்விய தேசமாக விளங்குவதோடல்லாமல் தேவாரப் பாடல்பெற்ற சிவத்தலமாகவும் திகழ்கின்றது. மூக்கீச்சரம் என்ற பெயரால் தேவாரத்தில் குறிக்கப் பெற்றுள்ளது. சோழமன்னன் ஏறிச்சென்ற யானையின் தலையை ஒரு கோழி கொத்தியதால் அம்மன்னன் அவ்விடத்தில் தலைநகரமைத்துக் கோழி என்று பெயரிட்டான். அரசன் உறைவிடமாகப் பெற்றமையின் உறையூர் என்ற பெயர் ஏற்பட்டது, ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்ருகிய சிலப்பதிகாரத்திலும், மற்ற சங்க நூல்களிலும் இவ்வூரின் பெருமை கூறப்பட்டிருக்கிறது. டாலமி என்பார் இந்நகரைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிருர். இது வரலாற்றுத் தொடர்புடைய பழம்பதி. சோழ மன்னர்களின் தலைநகராகவும் பல காலம் இருந்தது. கோழியூர், குக்குடபுரி, வாரணம், நிசுளாபுரி, வில்வவனம், மாலூரவனம் என்ற பெயர்களும் இவ்வூருக்கு உண்டு.

கோயில் ஊரின் நடுவில் அழகாக அமைந்திருக்கிறது. உள்ளேயும் வெளியேயும் இரண்டு பிரகாரங்கள் உள்ளன. சுவாமி சந்நிதி கிழக்கு நோக்கியும், அம்பிகை சந்நிதி தெற்கு நோக்கியும் இருக்கின்றன. உட்பிரகாரத்தில் விநாயகர், முருகர், இலக்குமி, நவக்கிரகங்கள், நால்வர், உதங்க முனிவர் முதலியவர்களுடைய விக்கிரகங்கள் இருக்கின்றன. கோயில் மதிலுக்கு வெளியே நந்திமண்டபமும், சிவ தீர்த்தக்குளமும் அமைந்துள்ளன. குடமுருட்டியாறு, சிவ தீர்த்தம் இவை தீர்த்தங்கள். தலவிருட்சம் வில்வமரம்.

இத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனுக்குப் பஞ்சவர்ணேசுவரர், ஐவண்ணப் பெருமான், ஐந்நிற நாயனுர், நாகேசர் என்ற பெயர்கள் வழங்குகின்றன. இக்கோயில் கல்வெட்டுக்களில் வேந்தன் மூக்கீச்சரம் உடையார், திருவுடைத்தலைப் பெருமாள், திரு உறையூர் திருந்தைத்தலை மகாதேவர் என்ற பெயர்களால் குறிக்கப்பெற்றிருக்கின்ருர். பிரமன் வந்து பூசிக்கும் பொழுதும், உதங்க முனிவர் வழிபடும் ஐந்து காலங்களிலும் அரதனம், படிகம், பொன், வயிரம், சித்திரலிங்கமாக ஐந்து நிறங்களுடன் பெருமான் காட்சியளித்ததால் பஞ்சவர்ணேசுவரர், ஐவண்ணநாதர் என்ற பெயர்கள் உண்டாயின. இன்

னும் வில்வாரணியநாதன், காந்திமதி மணவாளன், உறந்தைநாதன் என்ற திருநாமங்களும் உண்டு. அம்பிகைக்குக் காந்திமதி என்ற பெயர் வழங்குகிறது.

'மாடம் மலியும் திருவுறையூர்,' 'மல்குஞ்செல்வத் திருவுறையூர்,' 'கறங்கிசை விழவின் உறந்தை,' 'பீடார் உறந்தை,' 'அறந்துஞ்சு உறந்தை,' 'அறங்கெழு நல்லவை உறந்தை,' என்று நூல்களால் பலபடப் பாராட்டப்பெற்றிருக்கிறது. புகழ்ச்சோழர், கோச்செங்கட் சோழர் இந்த இரண்டு நாயன்மார்களும் அவதரித்த திருப்பதி. கரிகாலச் சோழன், நலங்கிள்ளி, கிள்ளிவளவன் முதலிய சோழ மன்னர்கள் உறையூரைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்தனர். சோழ மன்னர்கள் முடிசூட்டிக் கொள்ளும் நகராகவும் இருந்தது. இளம் பொன் வாணிகனார், ஏணிச்சேரி முடமோசியார், மருத்துவன் தாமோதரனார், முதுகண்ணன் சாத்தனார், முதுகூத்தனார் முதலிய பெரும்புலவர்கள் வாழ்ந்த இடம். பிற்காலத்தே முத்துவீரியம் என்ற அரிய இலக்கண நூலை இயற்றிய முத்துவீர உபாத்தியாயர் இவ்வூரினரே.



பஞ்சவர்ணேசுவரர் கோயில்

திருஞானசம்பந்தர் பதினொரு பாடல்களுடைய ஒரு பதிகம் பாடியுள்ளனர். அதில் சேரன், சோழன், பாண்டியன் என்ற மூவேந்தரும் இங்கு வந்து வழிபட்டதைக் குறிக்கிறார். 'வேந்தன் மூக்கீச்சரத்தடிகள்' என்று தேவாரத்தில் கூறியிருப்பது கோயில்கல்வெட்டிலும் வருகிறது. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், உறையூர்ப் புராணம் என்ற செய்யுள் நூலை இயற்றியிருக்கிறார்கள். நாட்டுப்படலம் முதல் வேதச் சுருதிப்படலம் ஈறாக 15 படலங்களில் 1417 பாடல்கள் இருக்கின்றன. அவர்களே காந்திமதியம்மையின் பேரில் ஒரு பிள்ளைத் தமிழும் பாடியிருக்கிறார்கள். அதில் ஒரு பாடல் வருமாறு:

கள்ளையருந்தி உவட்டெடுத்துக்
கண்டந்திறந்து பாண்மிழற்றிக்
காளைச்சுரும்பர் அடைகிடக்கும்
கருந்தார் அளகக்தற்பகமே
வெள்ளைமயிற்கும் செம்மயிற்கும்
மேலாய்விளங்கும் பசுமயிலே
மெய்யேஉணரும் உளத்தின்பம்
விளங்குங்கனியே மடவன்னப்
பிள்ளைநடைக்கும் வழுவுநிரீஇப்
பிடியின்நடக்கும் பெண்ணமுதே
பேரானந்தப் பெருங்கடலே
பிறங்கஅறங் கொள்மனைதோறும்
வள்ளைமலியும் திருவுறந்தை
வாழ்வே வருகவருகவே
மாறுப்பவநோய் மாற்றுமலை
மருந்தே வருகவருகவே.

முத்தொள்ளாயிரம் என்ற நூலில் இவ்வூரைப் பற்றிக் கீழ்க்காணும் செய்யுள் ஒன்றுள்ளது:—

மாலைவிலை பகர்வார் கிள்ளைக் களைந்தபூச்
சாலமிகுவதோர் தன்மைத்தாய்க்—காலையே



உதங்க முனிவர்

விற்பயில் வானகம்போலுமே வேல்வளவன்
பொற்பார் உறந்தை அகம்.


இன்னும், சிவநாமப்பல் தோடை வெண்பாவில் "மூக்கீச்சர நகர் வாழ் மோகமிகு காந்தி மதி வாக்காற் புகழ் பஞ்சவர்ணனே" என்று கூறப்பட்டிருக்கின்றது.

கோயில் உள்வாயில் பக்கத்துள்ள தூணிலும், அம்மன் கோயில் கீழ்புறச் சுவரிலும் கோழியும் யானையும் போர் செய்யும் உருவங்கள் இருக்கின்றன. பஞ்சவர்ணேசுவரர் கோயிலின் தென், மேல், வடபுறச் சுவர்களிலிருந்து அரசாங்கத்தார் 1907-ஆம் ஆண்டு கல்வெட்டுக்கள் படியெடுத்திருக்கின்றனர். அக்கல்வெட்டுக்கள் பின்னுல் திருப்பணி செய்யப்பெற்றபோது மறைந்து விட்டபடியால் அவை இப்போது காணப்படவில்லை. இராஜகேசரிவர்மன், பரகேசரிவர்மன், உடையார் இராஜேந்திரதேவன், கோனேரின்மை கொண்டான் இம்மன்னர்கள் காலத்தில் கோயில் பூசைகளுக்காக நிலம், ஊர் இவைகள் வழங்கியதைக் கூறுகின்றன. உறையூர், கேரளாந்தக வளநாடு, இராஜகம்பீர வளநாடு இவைகளில் உறையூர்க் கூற்றத்திலுள்ள ஒரு ஊராகக் கூறப்பட்டிருக்கிறது. ஒரு கிராமத்தின் பெயர் அதிகுணகற்பக நல்லூர் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. உறையூருக்கு அண்மையிலுள்ள சோழன்

பாறையில் திரிபுவனச்சக்கரவர்த்தி-திரிபுவன வீரவிக்கிரம சோழன் காலத்திய கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. அதன் விவரம் விளங்கவில்லை.

குலகிரியின் கொடுமுடிமேல்
கொடிவேங்கைக் குறிஎழுதி
நிலவுதரு மதிக்குடைக்கீழ்
நெடுநிலங்காத் தினிதளிக்கும்
மலர்புகழ் வண்டமிழ்ச்சோழர்
வளநாட்டு மாமூதூர்
உலகில்வள ரணிக்கெல்லா
முள்ளுறை யூராமுறையூர்

—சேக்கிழார் பெரிய புராணம்.



கோழி யானை சண்டை

மன்னார்குடி வட்டம், திருநெல்லிக் காவல் ஸ்ரீ நெல்லிவனநாதசுவாமி கோயிலில் திருஞான சம்பந்த சுவாமிகளால் பாடப்பெற்ற 11 பாடல்களின் கல்வெட்டுத் திறப்புவிழாவும், ஸ்ரீ நடராஜப் பெருமான் சந்நிதியில் பன்னிரு சைவத்திருமுறைக் கோயில் ஆரம்ப விழாவும், ஆலய அலுவலகத்தில் ஓர் நூலகத் திறப்புவிழாவும், சென்னை மாநில இந்து அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ். அவர்களால் 23-6-59-ல் திறந்து வைக்கப்பெற்றன. அது சமயம் தஞ்சை துணை ஆணையாளர் திரு ஏ. சக்கரை, பி.ஏ., பி எல்., அவர்களும், உதவி ஆணையாளர் திரு கே. வி. குமாரன் நாயர், பி ஏ., அவர்களும் அறங்காவலர் திரு. எம். சுவாமிநாத முதலியார் அவர்களும் கலந்துகொண்டனர். தருமபுர ஆதின சைவசமய பிரசாரகர் திரு கே. சிவஞானம் அவர்கள் பதிகக் கருத்துக்களைப் பற்றி விளக்கிக் கூறினார்கள்.

மதுரை, கள்ளழகர் கோயிலில் ஆடி பிரம்மோத்சவம் 11-7-59 முதல் 21-7-59 முடிய சிறப்பாக நடைபெற்றது.

# — சண்டேசுர நாயனார் —

மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினலெறிந்த
வம்மையா னடிச்சண்டிப் பெருமானுக்கடியேன்

*— சுந்தரர் திருத்தொண்டத் தொகை.*

குலமே றியசேய்ஞ லூரிற்
குரிசில் குரைகடல்சூழ்
தலமே றியவிறற் றண் டிகண்
டீர்தந்தை தாளிரண்டும்
வலமேறிய மழு வாலெறிந்
தீசன் மணி முடிமே
னலமே றியபால் சொரிந்தலர்
சூட்டிய நன்னிதியே

*—நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி.*

பொன்னியாறு எந்நாளும் பொய்யாது பாய்ந்து வளம் பெருக்கும் சோழ நாட்டில் மண்ணியாற்றின் தென்கரையில் **சேய்ஞலூர்** என்ற ஊர் உளது. அது மறையவர் வாழும் பதியாகும். அங்கு அந்தணர் மரபிலே காசிப கோத்திரத்திலே **எச்சதத்தன்** என்பவர் வாழ்ந்தார்; அவர் மனைவி **பவித்திரை**. அவர்களுக்கு விசாரசருமர் என்ற மைந்தர் தோன்றினர். ஐந்து வயதளவிலேயே, முன்னைப் பிறப்பின் அறிவு தொடர்ந்ததால், வேத சிவாகமங்களை ஓதாதுணர்ந்தார். ஏழு வயதில் முந்நூல் அணியும் வினையும் நிகழ்ந்தது. அவருக்குக் கல்வி பயிற்றும் ஆசிரியர்கள் அவரின் திறத்தைக் கண்டதிசயித்தார்கள். கலைகளுக்கெல்லாம் பொருள் முடிவாய்த் திகழ்வது தில்லைக் கூத்தன் திருவடியே எனச் சிந்தை தெளிந்தார்.

விசாரசருமர் தன்னுடன் மறை பயிலும் மாணவர்களுடன் அவ்வூர்ப் பசுக் கூட்டத்துடன் சென்றார். அண்மையில் கன்றீன்ற பசுவொன்று இடையனை முட்டப் போயிற்று. அவ்வாயன் அதனைக் கோல் கொண்டு நையப் புடைத்தான். பசுவின் மேல் வைத்த அன்பால் விசாரசருமர் அவனைச் சினந்து பசுவை அடிப்பதினின்றும் விலக்கினர். "பசுக்கள் எல்லா உயிர்களிலும் சிறந்தவை; தீர்த்தங்கள் எல்லாம் பொருந்தப் பெற்றவை; தேவர், முனிவர், கடவுளர் இவர்களை அங்கமாக உடையவை; பஞ்சகவியம் தருபவை; திருநீற்றுக்குக் கோமயம் கொடுப்பவை; இறைவனும் தேவியும் எழுந்தருளும் விடையின் குலத்தைச் சார்ந்தவை; ஆதலின் அவைகளைக் காக்கும் கடன் சிவவழிபாட்டு நெறியாகும்" என்று துணிந்தார். இடையனைப் பார்த்து "நீ பசு மேய்க்கும் தொழிலை விடு; இனி நானே அதை மேற்கொள்கிறேன்" என்றார். அவனும் பயந்து அகன்று போய்விட்டான்.

ஊரிலுள்ள அந்தணர்களின் இசைவைப் பெற்று மாடுகளை மேய்க்கும் பணியைச் செய்து வரலானர். புல் உள்ள இடங்களில் மேய்த்தும், தண்ணீர் இருக்குமிடங்களில் அவைகளை அருந்தச் செய்தும், மரநிழலில் இளைப்பாறச் செய்தும், உரிய வேளையில் அந்தணர்கள் இல்லங்களில் அவைகளைச் சேர்த்தும் வந்தார். ஆனிரைகளும் முன்னையினும் பன்மடங்காய் பால் கறப்பதாயின. மறைக்கன்றாகிய விசாரசருமரின் அருகிற் சென்று கறவாமே பால் பொழிந்தன. அவ்வளவில் மறைச்சிறுவர் பால் திருமஞ்சனத்துக்காகும் குறிப்புணர்ந்தார். மண்ணியாற்றின் மணற்றிடரில் ஆத்திமர நிழலில் மணலினால் இலிங்கமும் ஆலயமும் அமைத்தார்; மலர் கொய்து பூக்கூடையில் நிரப்பினர்; குடத்தில் பசு பொழிந்த பாலை ஏந்தினர்; இறைவனுக்குத் திருமஞ்சனம் செய்து பூசனை புரிந்தார். அவரது பாற்குடங்களில் நிறையப் பால் சொரிந்தாலும் அந்தணர் இல்லங்களில் எப்போதும் போல் அவைகள் பாலைக் குறைவறக் கொடுத்தன.

இவ்வாறே விளையாட்டாக விசாரசருமர் பல நாட்கள் செய்து வந்தார். அவர் செய்யும் பூசனையின் பெருமை உணராத அந்தணன்

சீலம்மிகு சித்தத்தவர் சிந்தித்தெழும் எந்தை —திருஞான சம்பந்தர்

ஒருவன் சேய்ஞலூர் மறையவர்களுக்கு அறிவித்தான். அவர்களும் எச்சதத்தனைக் கேட்டார்கள். இனி அப்படி நடவாதவாறு பார்த்துக் கொள்வதாக அவர்களுக்கு வாக்களித்து விட்டு தானே நிகழ்ச்சியைக் காணவேண்டுமென்று முடிவு செய்தார். மறுநாட் காலை விசாரசருமர் வழக்கம் போல் பசுக் கூட்டங்களை ஒட்டிச் சென்று மேய்த்துக் கொண்டிருந்தார். தந்தையாகிய எச்சதத்தன் அங்கு அவர் அறியாமற் சென்று குராமரம் ஒன்றில் ஏறி ஒளித்துக் கொண்டிருந்தார். சேய்ஞலூர்ச் செல்வரும் வழக்கம்போல் நீராடி, மணலால் கோயில், இலிங்கம் இவைகள் அமைத்து, மலர் பறித்து, பாற்குடங்களை நிரப்பிப் பூசனையைத் தொடங்கினர். பாற்குடங்களை யெடுத்துத் திருமஞ்சனம் ஆட்டினர். மரத்தின் மேலிருந்து பார்த்த தந்தையாருக்குக் கோபம் மூண்டது. இறங்கி வந்து கையிலுள்ள கோலால் விசாரசருமரின் முதுகில் ஒச்சினர்; கொடு மொழிகளையும் கூறினர். பலமுறை கொம்பினல் அடித்தும் ஒன்றிய மனத்தினராய்ப் பூசனையைச் சலியாதுசெய்து கொண்டிருந்தார். கையால் ஆகாத தாதையார் பாற்குடங்களைக் காலால் எற்றினர். இறைவன் திருமஞ்சனத்துக்கு ஆகும் பாலைச் சிந்தியது தந்தையார் என்று அறிந்தும், அங்கு கிடந்த கோல் ஒன்றை எடுத்து அவர் கால்களின் மேல் வீசினர். அதுவே மழுவாகி அவர் கால்களைத் துணித்துவிட்டது. அவரும் கீழே விழுந்தார். அப்போது சிவபெருமான் உமாதேவியுடன் விடையின் மேல் இவர்ந்து காட்சி கொடுத்தார். பாலகனர் பார்மீது வீழ்ந்து பணிந்தார். அவரை யெடுத்து 'பெற்ற தந்தையை எம்பொருட்டு வெட்டினை; இனி நாமே உனக்கு அடுத்ததாதை' என்று கூறி அணைத்து, உச்சி மோந்து மகிழ்ந்தார். இறைவன் திருக்கை படவே மறையவர் சிறுவர் சிவவொளியிலே விளங்கித் தோன்றினர். எம்பிரான் அவரைத் தொண்டர்களுக்குத் தலைவர் ஆக்கி, "நாம் உண்டபரிகலமும், உடுப்பவையும், சூடுபவையும் உனக்கே யுரிமையாகும்படி **சண்டீசன்** என்னும் பதவியைத் தந்தோம்" என்று திருவாய்மலர்ந்து அதற்கு அடையாளமாகத் தம்முடியிற் சூடியிருந்த கொன்றை மாலையைச் சூட்டியருளினர். சண்டீசரும் சைவ நன்னெறி ஓங்கச் சிவபெருமானைக் கும்பிட்டுக் கொண்டு தம் பதவியில் அமர்ந்தார். சேய்ஞலூர்ப் பிள்ளையாரின் திருக்கை மழுவினல் தண்டிக்கப்பட்ட எச்சதத்தன் சிவலோக மெய்தினர்.

சேய்ஞலூர் தஞ்சை மாவட்டத்தில் ஆடுதுறை இரயில் நிலையத்திலிருந்து வடக்கே ஏழுகல் தொலைவிலுள்ளது. **சேய்** (முருகக் கடவுள்) **நல்ல ஊர்** என்று எண்ணி சிவவழிபாடாற்றியமையால் சேய்ஞலூர் என்னும் பெயர் பெற்றது. **'சேந்தன்** அளித்த திருமறையோர்மூதூர் செல்வச் சேய்ஞலூர்' என்பர் சேக்கிழார். சோழ அரசர்கள் முடிசூட்டிக் கொள்ளும் ஐந்து ஊர்களில் ஒன்ருகிய சிறப்புடையது சேய்ஞலூர். மற்றவை காவிரிப்பூம் பட்டினம், திருவாரூர், உறையூர், கருவூர் என்பன. சண்டீசர் மணல் இலிங்கத்திற்குப் பாலினல் திருமஞ்சனம் ஆட்டிச்சிவ பூசை செய்த இடம் **திருஆப்பாடி** என்ற பெயரால் வழங்குகிறது, சண்டேசுரநாயனர் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் இவர்களுக்கு முற்பட்டவர் என்பது அவரைத் தம் பாடல்களில் புகழ்ந்து போற்றியிருப்பதால் தெரிகிறது. பதினெரு திருமுறைகளிலும அவர் பாராட்டப் பெற்றிருக்கின்றனர். சேக்கிழார் பெரிய புராணத்தில் அவர் வரலாற்றை 59 பாடல்களில் அழகுபெற அருளியுள்ளார். அவர்காலத்துக்கு முன்னிருந்த இராஜேந்திர சோழன் எடுப்பித்த கங்கை கொண்ட சோழபுரம் கோயிலில் சிவபெருமான் உமாதேவியாருடன் சண்டீசருக்குக் கொன்றைமாலை சூடுவதாகிய கற்சிற்பம் காணப்படுகிறது. இதைப் பார்த்தே சேக்கிழார் **சண்டீசப்பதம்** எய்திய செய்தியை நன்கு விளக்கியிருக்க வேண்டும். சேக்கிழார், சண்டேசுரரைச் 'சிறிய பெருந்தகையார்', 'சேய்ஞலூர்ப் பிள்ளையார்', 'சிறிய பெருந் தோன்றலார்', 'பத்தி முதிர்ந்த பாலகனர்' என்றெல்லாம் போற்றிப் புகழ்கின்ருர். ஆனிரை காத்தலின் அருமையைக் கூறியுள்ளார்.

சிவாலயங்களில் எல்லாம் வடபிரகாரத்தில் கோமுகிக்கருகில் சண்டேசுர நாயனருக்குத் தனிக் கோயில் இருப்பதைப் பார்க்கிறோம்.

---

என்னிலாரு மெனக்கினி யாரில்லை
என்னிலும் இனியான் ... ஈசன்

—அப்பர்

இறைவனுக்குச் சாத்தியெடுக்கப்படும் நிர் மாலியங்களெல்லாம் அவருக்கு அணியப்படும் முறை கோயில்களில் இன்றும் நடைபெற்று வருகின்றது. சிவன் கோயிலை வழிபடச் செல்பவர்கள் இவர் சந்நிதியை அவசியம் வழிபட வேண்டும். திருவிழாக் காலங்களில் இறைவன், தேவி, கணபதி, முருகன் இவர்களுடன் சண்டேசுரரும் எழுந்தருளுகின்றார். பஞ்சமூர்த்திகளில் ஒருவராகும் பேறு பெற்ற இந்த நாயனாரின் பெருமை சொல்லுந்தகையதோ! 'தந்தை தாளொடும் பிறவித்தாள் எறிந்த சண்டீசர்' என்பர். பன்னிரண்டு திருமுறைகளை யன்றியும் தலபுராணங்கள், மற்றும் பிற்கால நூல்கள் பலவற்றுள் இவர் பாடப் பெற்றிருக்கிறார். தாயுமான அடிகள்,

தந்தையிரு தாள் துணித்துத்
தம்பிரான் தாள்சேர்ந்த
எந்தையிரு தாளிணைக்கே
இன்புறுவ தெந்நாளோ

என்று பாடுகிறார்.

கடிசேர்ந்த போது மலரான
கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால் கொண்டங்
காட்டிடத் தாதை பண்டு
முடிசேர்ந்த காலை யறவெட்டிட
முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணமறிவார்
சொலக் கேட்டு மன்றே

—திருஞான சம்பந்தர்.

---

திருக்குற்றாலம், திருக்குற்றால நாதசுவாமி கோயிலில் சாரல் மாநாடு 9-7-59 முதல் 15-7-59 முடிய நடைபெற்றது. சென்னை மாநில அறநிலையப் பாதுகாப்புத்துறை அமைச்சர், ஆணையாளர் முதலியோர் கலந்து கொண்டனர். சமயச் சொற்பொழிவுகளும், இன்னிசை நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெற்றன.

இலுப்பக்குடி ஸ்ரீ சௌந்தரநாயகி உடன் கூடிய ஸ்ரீ சுயம்பிரகாச சுவாமி ஆலய ஜீர்ணோத் தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 12-7-59 அன்று சிறப்பாக நடைபெற்றது.

நன்னிலம் தாலூகா, திருப்பணையூர் ஸ்ரீ சௌந்தரேசுவர சுவாமி தேவாலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 21-8-59 வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு நடைபெறும்.

திருமயிலை ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமிகள் ஆலய ஜீரணோத்தாரண மகா சம்ப்ரோக்ட்சணம் 8-7-59 முதல் 12-7-59 முடிய நடைபெற்றது.

ஸ்ரீரெங்கம், ஸ்ரீரெங்கநாத சுவாமி கோயிலில் மகா சம்ப்ரோக்ட்சணம் 6-7-59 தொடங்கி 12-7-59ல் நடைபெற்றது.

உடையார் கோயில், ஸ்ரீ கரவிந்தேச்வரசுவாமி கோயில் திருநெறிய தெய்வத்திருமுறை மாநாடு 8-7-59 முதல் 11-7-59 முடிய நடைபெற்றது. 12-7-59 அன்று ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்தேறியது.

மன்னார்குடி வட்டம் திருநெல்லிக் காவலிலுள்ள ஸ்ரீ நெல்லிவனநாதஸ்வாமிக்குச் சொந்தமான நஞ்சை நிலங்களில், 227 ஏக்கராவில் 48 சாகுபடிதாரர்களைக் கொண்ட கூட்டுறவு விவசாய சொசைட்டி ஒன்று நிறுவி பதிவு செய்யப்பட்டுள்ளது. இது இந்த வட்டாரத்திலேயே முதன் முதலில் நிறுவிய பெரிய சங்கமாகும்.

# மதுரகவியாழ்வார்

வேறொன்றும் நானறியேன்
வேதம் தமிழ்செய்த
மாறன் சடகோபன்
வண்குருகூர்—ஏறெங்கள்
வாழ்வாமென் றேத்தும்
மதுரகவி யாரெம்மை
ஆழ்வா ரவரே
அரண்

—ஸ்ரீ மந்நாதமுனிகள்.

தண்ணார் தமிழளிக்கும் தென்பாண்டி நாட்டிலே பல வளங்களும் குறைவற நிறைந்த திருக்கோளூர் என்னும் ஊர் ஒன்றுண்டு. அப்பதியில் உறைந்த முன்குடுமிச் சோழிய பிராமணர் குலத்தில் மதுரகவியார் அவதரித்தார். அவர் தமிழ்மொழி வடமொழி நூல்களையும், வேதவேதாங்கங்களையும் ஐயந்திரிபறக்கற்று, சிறந்த ஒழுக்கத்துடன் திருமகள்நாதன்பால் பேரன்பு பூண்டவராய் விளங்குகினர். தமிழில் மதுரமானகவிகளைப் பாடினமையின் அவர் அப்பெயரைப்பெற்ருர். காசி, காஞ்சி, அவந்தி, அயோத்தி, மதுரை, மாயை, துவாரகை என்ற முத்தி தரும் நகர் ஏழையும் சேவிக்க விழைந்தார். அவ்வாறே அப்பதிகளைச் சென்று சேவித்த பின், அயோத்தியில் வந்து தங்கினர். ஓர் இரவு சேய்மையில் ஒரு பேரொளி காணப்பட்டது. அதை நோக்கிச் செல்ல அது தென்திசை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. மதுரகவியாரும் பின் தொடர்ந்தே செல்வராயினர். பொழுது புலர்ந்ததும் அவ்வொளி மறைந்துவிட்டது. ஆழ்வாரும் பகலில் அவ்விடத்தில் தங்கினர். இரவில் மறுபடியும் ஜோதியைக் கண்டு அதன்பின் செல்வாரானர். இவ்வாறே பகலில் தங்குவதும், இரவில் பேரொளியைத் தொடர்வதுமாகப் பல பதிகளைக்கடந்து, பாண்டிப்பதிகளில் ஒன்ருகிய திருக்குருகூரை அடைந்தனர். அப்பிழம்பு அப்பதியிலுள்ள பொலிந்து நின்றபிரான் திருக்கோயிலுட் புகுந்து மறைந்து விட்டது.

மதுரகவியார் கோயிலினுள்ளே சென்ருர்; உறங்காப்புளி நீழலில் முழுமதி முகத்தினராய், கண்மூடி மௌனியாய் அமர்ந்திருக்கும் நம்மாழ்வாரைக் கண்டார், அவருக்குச் செவி கேட்குமோ என்று தெரிந்து கொள்ள ஒரு கல்லை அவர்முன் திடீரென்று போட்டார். ஆழ்வார் கண்விழித்தருள, அவர் பேசுவாரோ என்பதறியச் "செத்ததின் வயிற்றிற் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்" என்ருர் மதுரகவியார். நம்மாழ்வாரும் "அத்தைத் தின்று அங்கே கிடைக்கும்" என்று அருளிச் செய்தார். மதுரகவிகளும் ஆழ்வாருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். எம்பெருமானும் பெரிய திருவடிமீது எழுந்தருளி சேவை சாதித்து ஆழ்வாருக்கு மயர்வறமதிநலம் அருள, ஆழ்வாரும் திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி முதலிய திவ்வியப் பிரபந்தங்களையும் அருளினர். மதுரகவியார்க்கு நம்மாழ்வாரிடம் அளவு கடந்த அன்புண்டாயிற்று. அவரையே தெய்வமெனக் கொண்டு, எம்பெருமானையும் பாடாமல், ஆழ்வாரையே பதினொரு பாசுரங்களாலான பாமாலை பாடினர். அது, 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்று தொடங்குவதால் அப்பெயராலேயே வழங்குவதாயிற்று. அதில் ஒரு பாடல் வருமாறு:

நன்மை யால்மிக்க நான்மறை யாளர்கள்
புன்மை யாகக் கருதுவர் ஆதலின்
அன்னை யாயத்த னுயென்னை ஆண்டிடும்
தன்மை யான்சட கோபனென் நம்பியே.

பாசுரங்களில் குருகூர்நம்பி, சடகோபன், காரிமாறப்பிரான் என்ற பெயர்களமைத்து நம்மாழ்வாரைப் பாடி யிருக்கிருர். அவரைத் தவிர தனக்கு வேறு தெய்வமில்லை யென்பதை, 'தேவு மற்றறியேன் குருகூர்நம்பி

தெய்வம் தெளிமின்; தெளிந்தோர்ப் பேணுமின்

—இளங்கோவடிகள்.

பாவின் இன்னிசை 'பாடித் திரிவனே' என்று சொல்கிறார். ஒரு பாட்டில் 'ஒண்டமிழ்ச் சடகோபன்' என்று குறிக்கிறார்.

மதுரகவியார், நம்மாழ்வாருடைய அர்ச்சை உருவை திருக்கோயிலில் எழுந்தருளச் செய்து, நாள் பூசை, திருவிழாக்கள் முதலியன நடத்திவந்தார். திருவிழாவில் ஆழ்வாருடைய அர்ச்சை உருவை வாகனத்தில் எழுந்தருளச் செய்து, பல்லியங்கள் முழங்க, 'வேதம் தமிழ் செய்த பெருமாள் வந்தார்' என்று விருது பிடித்தனர். அப்படி விருது கூறுவதை மதுரை சங்கப் புலவருள் சிலர் ஆட்சேபித்தனர். மதுரகவியார் 'எங்கள் ஆழ்வார் பாடலுக்கு சங்கப் பலகை இடந்தருமாயின் அவருக்கும் இடம்கொடுத்ததாம்' என்று கூறி ஒரு முறியில் பின்வரும் நம்மாழ்வார் பாசுரத்தை எழுதிக் கொடுத்தனர்:—

**கண்ணன் கழலிணை**
**நண்ணும் மனமுடையீர்**
**எண்ணும் திருநாமம்**
**திண்ணம் நாரணமே.**

அச்சிறு முறியைச் சங்கப் பலகையில் வைக்க அது புலவர்களை யெல்லாம் கீழே தள்ளிவிட்டு, அவ்வேட்டின் அளவாகச் சுருங்கி நின்றது. புலவர்கள் ஆழ்வாரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர். அது முதல் மதுரகவியாழ்வார், நம்மாழ்வாருக்குப் பல விழாக்களையும் ஆராதனைகளையும் நடத்தி வந்ததோடு, அவர் அருளிய பாசுரங்களின் அரும்பொருள்களைப் பலருக்கும் எடுத்து விளக்கி உலகத்தை வாழ்வித்தருளினார்.

மூவாயிரப்படி குருபரம்பரையில் மதுரகவிகள் துவாபரயுகம் 863879 (கி. மு. 3224) ஈசுவர ஆண்டு, சித்திரைத் திங்கள், சுக்கில சதுர்த்தசி, வெள்ளிக்கிழமை, சித்திரை நட்சத்திரத்தில் அவதரித்தார் என்று கூறப்பட்டிருக்கிறது. 'ஏரார் மதுரகவி இவ்வுலகில் வந்துதித்த சீராரும் சித்திரையிற் சித்திரை நாள்' என்று ஒரு பாடற் பகுதியில் காணலாம். அவர் ஸ்ரீகுமுத கணேசாம்சராய்த் திரு அவதரித்தார். ஆழ்வார்கள் கால நிலையை ஆராய்ந்த பேரறிஞர் அவர்களுடைய காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து பத்தாம் நூற்றாண்டுக்குட்பட்ட ஐந்நூறு ஆண்டுகள் என்று கருதுகின்றனர். மேற்சொன்ன வரலாற்றிலிருந்து மதுரகவியார் நம்மாழ்வார் காலத்தவர் என்பது அறியக் கிடக்கின்றது. மற்ற ஆழ்வார்கள் இறைவனைப் பாடியதுபோல் பாடாமல், திருமாலடியாரைப் பாடிப் பெருமை பெற்றுத் திகழ்ந்தவர்.

**அன்பன் தன்னை**
**அடைந்தவர் கட்கெல்லாம்**
**அன்பன் தென்குரு**
**கூர்நகர் நம்பிக்கு**
**அன்ப னய்மதுர**
**கவி சொன்னசொல்**
**நம்பு வார்பதி**
**வைகுந்தம் காண்மினே**

என்று கூறித் தாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறவேண்டும் என்று விழைகிறார்.

சித்திரையிற் சித்திரைநாள்
சிறக்கவந்தோன் வாழியே
திருக்கோளூர் அவதரித்த
செல்வபிரான் வாழியே
உத்தரகங் காதீரத்
துயர்தவத்தோன் வாழியே
ஒளிர்கதிரோன் தெற்குதிக்க
வுவந்துவந்தோன் வாழியே
பத்தியொடு பதினொன்றும்
பாடினான் வாழியே
பராங்குசனே பரனென்று
பற்றினான் வாழியே
மத்திமமாம் பதப்பொருளை
வாழ்வித்தான் வாழியே
மதுரகவி திருவடிகள்
வாழிவாழி வாழியே.

---

ஞாலம் நின்புகழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே

—திருஞானசம்பந்தர்.

# தாயுமானவர்

சிராப்பள்ளி மலைமேவுந் தட்சிணா
  மூர்த்தியருள் நல்கப் பெற்றுப்
பராபரமு மெந்நாளும் பைங்கிளியும்
  பலபாவும் பாடிப் பாடித்
தராதலமா னிடர்க்கெல்லாந் தண்ணமிர்தாய்த்
  தந்தருளுந் தாயு மான
நிராமயனார் அருட்பெரிய கவிதையினற்
  பொருளதனை நினைந்து வாழ்வாம்

—தனிப்பாடல்.

சோழநாட்டில் பாடல்பெற்ற சிவத்தலங்களில் ஒன்று வேதாரணியம் எனவழங்கும் திருமறைக்காடு. அவ்வூரின் கண் சைவ வேளாளரான கேடிலியப்ப பிள்ளையும் அவர் மனைவியார் கெஜவல்லியம்மையும் இல்லறமென்னும் நல்லறத்தை இனிது நடாத்தி வந்தனர். கேடிலியப்ப பிள்ளை திருமறைக் காட்டுக் கோயிலின் இறைபணியாளராக இருந்தார். அவருடைய தமையனார் வேதாரணியப் பிள்ளை புத்திரப் பேறு இன்றி வருந்தியதையறிந்து, தன் ஒரே மகனை சிவசிதம்பரம் என்பவனை வளர்ப்புப் பிள்ளையாக அளித்தார். கேடிலியப்பரின் ஒப்பற்ற சகோதர வாஞ்சையும், தன்னலமற்ற பெருங்குணமும் பெரிதும் போற்றத் தக்கது.

அக்காலத்தே திருச்சிராப்பள்ளியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்துவந்த முத்துக்கிருஷ்ணநாயக்கர் கடலாடும் பொருட்டு வேதாரணியம் வந்தார். கேடிலியப்பர் அவரைச் சிறப்பாக வரவேற்று, கடல் முழுக்கு, ஆலய வழிபாடு முதலியவற்றைச் செய்து வைத்தார். அவருடைய அருங்குணங்களையும், திறமையையும் கண்ட நாயக்க மன்னர் அவரை அழைத்துச் சென்று அரசாங்கப் பிரதம சம்பிரதி (தலைமைக்கணக்கர்) என்ற பதவியில் அமர்த்தினார். கேடிலியப்ப பிள்ளையும் தம் கடமைகளைச் செவ்வனே செய்து வந்தார். முத்துக்கிருஷ்ண நாயக்கருக்குப் பின் முத்துவீரப்ப நாயக்கர் அரசேற்றார். அவர் காலத்தும் பிள்ளையவர்கள் சம்பிரதித் தொழிலைத் திறம்பட நடத்தினார். நாள்தோறும் திருச்சிராப்பள்ளி மலைக்கோயிலில் எழுந்தருளியுள்ள தாயுமானவீசனை வழிபட்டு வந்தார். கெஜவல்லியம்மையார் வயிறு வாய்க்கப்பெற்று ஒரு நன்னாளில் ஆண் மகவு ஒன்றைப் பெற்றெடுத்தார். குன்றுடையான் திருவருளால் பிறந்த அக் குழந்தைக்கு அவன் பெயராகிய தாயுமானவன் என்ற பெயரிட்டு வளர்த்து வருவாராயினர். வளர்ந்துவந்த அம்மைந்தர் நற்குணம், நற்செயல், நல்லொழுக்கம், பக்தி முதலியவைகளுடன் திகழ்ந்தார்; தமிழ்மொழி வடமொழி நூற்களை ஐயந்திரிபறக்கற்றார்; செய்யுள் பாடும் திறமையும், பேசும் ஆற்றலும் பெற்றார்; பன்னிரு திருமுறை, பதினான்கு சாத்திரம் இவைகளை நன்கு ஓதியுணர்ந்தார்.

முத்துவீரப்ப நாயக்கரின் பின் அரசியும், அதன் பின்னர் விஜயரங்க சொக்கநாத நாயக்கரும் அரசாண்டனர். கேடிலியப்பர் ஒருநாள் திடீரென இறைவன் திருவடியடைந்தார். விஜயரங்க சொக்கநாதர் தாயுமானவரை அழைத்துப் பெரிய சம்பிரதிப் பணியை அளித்தனர். அவரும் திறம்பெறக் கடமை புரிந்தனர். ‘எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும் முத்தர் மனம் இருக்கும் மோனத்தே’ என்றபடி அவர் உள்ளம் இறைவன் திருவருட் கடலிலேயே திளைத்திருந்தது; ஞானகுருவருள் பெறும் நாளை நாடி நின்றது.

திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை வாயிலில் சாரமாமுனிவர் மடாலயத்தில் ஸ்ரீமத் மௌனகுரு (சிதம்பர நாதத் தம்பிரான் சுவாமிகள்) என்பவர் 17-ஆவது பட்டமாக அரு

---

நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே

—திருநாவுக்கரசர்.

லாட்சி நடத்தி வந்தார்கள். மௌன குரு சுவாமிகளின் பெருமையால் அம்மடம் **மௌன மடம்** என்ற பெயரால் வழங்கப் பெறுவதாயிற்று. சாரமாமுனிவர் நிட்டை கூடிப் பரிபூரணம் பெற்ற இடத்தில் முருகன் திருக்கோயில் ஒன்று எழுப்பப் பெற்றிருந்தது. வழக்கம்போல் ஒருநாள் தாயுமானவர், சிராமாலை ஈசனை வழிபட்டுத் திரும்புகையில் மடத்திலுள்ள குமரன் கோயிலை வணங்கி மீளும்போது மௌன குருவைக்கண்டார். உடனே அவர் திருவடிகளில் வீழ்ந்திறைஞ்சினர். தாயுமானரின் பரிபக்குவ நிலையைக்கண்ட மௌன குரு அவருக்கு,

*அறியாமை அறிவகற்றி அறிவினுள்ளே*
*அறிவுதனை அருளினன் அறியாதேஅறிந்து*
*குறியாதே குறித்தந்தக் கரணங்களோடும்*
*கூடாதே வாடாதே குழைந்திருப் பையாகில்*

என்ற சிவஞான சித்தியார் பாடற் பகுதியின் பொருளை விளக்கி, ஞானயோக முறைகளை உணர்த்தி, "அன்பனே! இன்னும் சிலகாலம் உலகத் தொழிலில் ஈடுபட்டு, இல்லறத்திருந்து, புத்திரப் பேறடைந்து இங்குவருக; அப்போது யாம் ஞானோபதேசம் செய்வோம்" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

மௌன குருவின் அருள்பெற்ற தாயுமானவர் நாள்தோறும் மலைக்கோயிலில் தென்முகக் கடவுளின் திருமுன்பு ஞான நிட்டைப் பயிற்சி செய்து வந்தார். அரசாங்க வேலைகளையும் வழுவின்றி நடத்தினர். **திருவருள் விலாசப் பரசிவவணக்கம், பொருள் வணக்கம், பரிபூரணனந்தம், சின்மயானந்தகுரு, மௌனகுரு வணக்கம், அகிலாண்ட நாயகிப் பதிகம்** இவைகளைப் பாடியருளினர். ஒருநாள் அரசியானவள் அவருடைய அழகில் ஈடுபட்டுத் தகாத செயலுக்கு உடன்படுமாறு வற்புறுத்த, அதற்கு மறுத்து அவளுக்கு நல்லறிவு புகட்டி, இனி அங்கிருத்தல் கூடாதென எண்ணி அன்றிரவே தம்முடைய சிறிய தாயார் மகனை அருளைய பிள்ளையோடு திருச்சிராப்பள்ளியை விட்டகன்றனர். நல்லூர் என்ற இடத்தில் **கருணாகரக் கடவுள்** என்ற பதிகம் பாடினர். பின்னர் விராலிமலை சென்று ஒரு வேளாள அன்பர் ஆதரவில் சில காலம் தங்கியிருந்தனர். அப்போது **சித்தர் கணம், ஆனந்தமானபரம், சுகவாரி** என்ற பதிகங்களை ஓதினர். அங்கிருந்து புறப்பட்டுச் சென்று புதுக்கோட்டைக்கு அண்மையிலுள்ள திருக்கோகர்ணத்தில் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள பெரிய நாயகியம்மையின் பேரில் பதிகம் பாடினர். பின்னர் இராமேசுவரம் சென்று இராமநாதரை வணங்கி, அம்பிகையின் திருமுன் **மலைவளர் காதலி** என்னும் பதிகம் ஓதித்துதித்தார்.

இராமேசுவரத்தில் தங்கியிருந்த போது மழையின்மையால் மக்கள் வருந்தினர். தாயுமானவர்,

*சைவசமயஞ் சமயமெனில் அச்சமயத்*
*தெய்வம் பிறைசூடுந் தெய்வமெனில்-*
*ஐவரை வென்(று)*
*ஆனந்த வெள்ளத் தழுந்துவதே முத்தியெனில்*
*வானங்காள் பெய்க மழை*

என்று பாடினர். அவ்வளவில் நல்ல மழை பெய்தது; மக்களும் மனமகிழ்ந்தனர். அவரும் அருளையரும் இராமேசுவரத்தில் இருப்பதை யறிந்த தமையனர் சிவசிதம்பரம் பிள்ளை அங்கு வந்து அவர்களை அழைத்துக் கொண்டு திருச்சிராப்பள்ளியை யடைந்து தாயாரையும் உடன் கொண்டு வேதாரணியம் சேர்ந்தனர். **மட்டுவார்குழலி** என்ற கற்புக்கரசியை தாயுமானவருக்கு மணம் புணர்வித்தனர். அவர் இல்லறம் நடாத்தி, **கனகசபாபதி** என்ற ஆண் மகவை ஈன்றெடுத்தனர். இல்வாழ்க்கையிலிருந்த போது பல கண்ணிகள், அகவல்கள், பதிகங்கள் முதலியவைகள் பாடினர். சில காலத்தின் பின் அவர் மனைவியாரும், அதன் பின் தாயாரும் சிவபதம் எய்தினர். மகனையும் சொத்துக்களையும் தமையனரிடம் ஒப்படைத்து விட்டுத் துறவு பூண்டு கோவண ஆடையுடன் வெளியேறினர். அருளையரும் அவரைப் பின் தொடர்ந்து தொண்டு பூண்டு ஒழுகினர். திருச்சிராப்பள்ளி மடத்தை யடைந்து மௌன குருவிடம் ஞானோபதேசம் பெற்றார். சில ஆண்டுகள் அங்கே தங்கியிருந்து பின்னர், குருவின்பால்விடைபெற்றுக்கொண்டு

சிந்தித் தெழுவார்க்கு நெல்லிக்கனியே


—சுந்தரர்

பல தலங்களை வணங்கிக் கடைசியாக இராம நாதபுரம் வந்தடைந்தார். காட்டூரணி என்னு மிடத்தில் புளியமர நீழலில் ஞானநிட்டை புரிந்து வருவாராயினர். ஒரு அம்மையார் நீர் நிலையொன்று எடுப்பித்து, பூங்காவொன் றமைத்து அங்கு எழுந்தருளும்படி அடிக ளாரை வேண்டினர். அவ்வண்ணமே அவரும் செய்தனர். அந்த இடம் இப்போது இலட்சுமி புரம் என வழங்குகிறது. அக்காலத்தே அருளை யருக்கும், கோடிக்கரை ஞானியாருக்கும் ஞானுப தேசம் செய்தனர். அவ்வாறு அங்கு ஞான நிட்டையில் அமர்ந்திருந்தபோது 1661-ஆம் ஆண்டு தைமாதம் திங்கட்கிழமை விசாகத் தன்று மாலை இறைவனுடன் இரண்டறக் கலந்து அத்துவித முத்திபெற்றனர்.

துகளறு சாலிவருடமா யிரத்தைஞ்
  ஞூற்றெண் பத்துமூன்று தொடரு
மிகுசுப கிருதாம் வருடம் தைமாதம்
  வெண்மதி வாரநாள் விசாக
மகிமைசேர் பூரணத் திதியினி லருந்த
  மண்டல சமயத்திற் கங்கை
திகழ்கரை யதனில் தாயுமா னவனுர்
  சிவத்தினில் கலந்தநற் றினமே

என்ற கோடிக்கரை ஞானியார் பாடலால் சாலிவாகனசகம் 1583 (கி. பி. 1661)-ஆம் ஆண்டு சுபகிருது தைமாதம் திங்கட்கிழமை விசாகத்தில் அடிகளார் முத்தியடைந்த காலம் என்று அறிகிறோம். இலட்சுமிபுரத்திலுள்ள சுவாமிகளின் சமாதிகோயிலில் “கி. பி. 1661-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 9உ தாயுமான வர் முத்தியடைந்த காலம்” என்று வரையப் பட்டிருக்கின்றது. ஆகவே சுவாமிகள் கி. பி. 17-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் திகழ்ந்தவர்கள் என்று கொள்ள வேண்டும். சிலர் கி. பி. 18-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் இருந்தவராகக் கருதுகின்றனர். ஆனல் மௌனமட வரலாற்றையும், பிற சான்றுகளையும் நோக்கும் போது இது பொருத்தமுடையதாகக் காணப்படவில்லை.

தாயுமான அடிகளாரின் பாடல் தொகை 1452 ஆகும். இதை,



ஸ்ரீ தாயுமான ஸ்வாமிகள்

விண்ணறுந்தே வர்கள் முனிவர் கணங்கள் சித்தர்
  புகழ்மௌனி வியப்பால் ஞானத்
தண்ணுறுதண் டமிழ்மாலை ஐஞ்ஞூற்றெண்
  பத்தேழுந் தாயு மானேன்
எண்ணுறுங்கண் ணிகள் எண்ணூற் றறுபத்
  அகவல்வண்ணம் இரண்டும்பாடி [தைந்து
மண்ணுறுநால் வகைமாந்தர் தமக்காகப்
  பக்குவர்பால் வைத்தான் அன்றே

என்ற தனிப்பாடலால் அறியலாம். அவரு டைய பாடல்கள் எளியவை; இனியவை; பக் திச் சுவை பயப்பவை; உள்ளத் தொளியை யும் வாழ்வில் ஒளியையும் அளிப்பவை. அவர் பெரிய சமரசஞானி. “சந்ததமு மெனது செயல் நினது செயல் யானெனுந் தன்மை யால் வேறலேன் வேதாந்த சித்தாந்த சமரச சுபாவமிதுவே” என்றும், “வேதாந்த சித் தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகச்சித்தர் கணமே” என்றும் கூறுவதால் அறியலாம். அவருடைய முடிந்த கொள்கை சைவசித்தாந் தமே என்று அவர்களின் பாடல்களிலிருந்து தெரிகிறது. ‘இராசாங்கத்தில் அமர்ந்தது வைதிகசைவம்’ என்று கூறுகிறார்.

உடலை, ‘ஆக்கையெனும் இடிகரை’ என் றும், ‘மின்னனைய பொய்யுடல்’ என்றும்’ ‘ஐந்து வகையாகின்ற பூதபேதத்தினுல் ஆக்கை

அருளே உலகெலாம் ஆள்விப்பது ஈசன்
அருளே பிறப்ப றுப்பது
—காரைக்காலம்மையார்.

நீர் மேல் அமர்கின்ற குமிழி' என்றும் அதன் நிலையாமையை உணர்த்துகிறார். மனதை யடக்க வேண்டும் என்பதற்காகப் பெரிதும் கவல்கிறார். 'எத்தனை விதங்கள் தான் கற்கினும் கேட்கினும் என் இதயமும் ஒடுங்கவில்லை', 'பாழான என் மனம் குவிய ஒரு தந்திரம் பண்ணுவதுனக்கருமையோ,' 'சிந்தையை யடக்கியே சும்மாவிருக்கின்ற திறமரிது', 'மன மிறக்கக் கல்லார்க்குவாயேன் பராபரமே' என்ற கூற்றுக்களால் அறியலாம்.

'கற்றதும் கேள்வி கேட்டதும் நின்னைக் கண்டிடும் பொருட்டன்றோகாணே' என்று கற்றதனால் ஆயபயன் இறைவனைக் காணுதல் என்கிறார். 'என்றுநீ அன்று நான் உன் அடிமையல்லவோ' என்பதால் இறைவன், உயிர் இவைகள் அனாதியானவை என்பதைக் குறிக்கிறார். 'எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதான் யாதினும் அரிதரிது காண்' என்கிறார். 'கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க எல்லார்க்கும் சொல்லுவதென் இச்சை பராபரமே' என்று கொல்லாமையைக் கூறுகிறார். 'அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டு விட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே' என்று என் கடன் பணி செய்து கிடப்பதே என்பதைச் சொல்கிறார்.

தாயுமானார் பெரியோர்களைப் போற்றி அவர்கள் சென்ற நெறிக்கண் செல்லவேண்டுமென்றும் மிகவும் விழைகிறார். சனகாதி முனிவர் நால்வர், வாமதேவர், சுகர், மார்க்கண்டேயர் இவர்களைப் பற்றிக் குறிக்கிறார். 'கந்தரநுபூதி சொன்ன எந்தை', 'ஐயா! அருணகிரி அப்பா!' என்று அருணகிரியாரையும், 'சிவம் மெய்யெனவே விண்ட சிவவாக்கிய'ரையும், 'சக்கரவர்த்தி தவராஜயோகி' என்று திருமூலரையும், 'பட்டினத்துப் பிள்ளையைப் போல் யாரும் துறக்கை அரிது அரிது' என்று பட்டினத்து அடிகளையும், 'மொழிக்கு மொழி தித்திப்பாக மூவர் சொலும் தமிழ்' என்று அப்பர், சம்பந்தர் சுந்தரர், என்ற மூவரையும், 'வாதவூர் ஐயன் அன்பை வாஞ்சிப்ப தெந்நாளோ' என்று மாணிக்கவாசகரையும், 'பொய் கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித மெய் கண்ட நாதன்' என்று மெய்கண்ட தேவரையும், இன்னும் அருணந்தி சிவம் முதலியவர்களையும் போற்றிப் புகழ்ந்திருக்கிறார்.

தாயுமான சுவாமிகளின் பாடல்களில் பல பழமொழிகள் விரவி வந்துள்ளன. எடுத்துக்காட்டாகக் கீழே சில தரப்படுகின்றன :—

'பொய்த்துயில் கொள்வான்தனை எழுப்பவசமோ'
'வல்லான் வகுத்ததே வாய்க்கால்'
'அவனன்றி யோரணுவும் அசையாது'
'பிள்ளையைத் தொட்டில் வைத்தாட்டியாட்டித் தொடையினைக் கிள்ளல் போல்'
'புருஷனிலடங்காத பூவைபோல்'
'ஆடாமல் ஓய்ந்திட்ட பம்பரம் போல்'
'சாட்டையிற் பம்பரசாலம் போல்'
'இனம் பிரிந்த மான் போல்'
'மான்காட்டி மானையீர்க்கும் கொள்கையென'
'இடுக்குவார் கைப்பிள்ளை'
'இரும்பைக் காந்த மிழுக்கின்றவாறு'
'கண்டிடும் ஊமன் கனவென'
'கையிலாமலகக் கனிபோன்ற'
'பள்ளத்தில் வீழும் புனல்போல்'
'பெற்றவட்கே தெரியுமந்த வருத்தம் பிள்ளை பெறுப்பேதை அறிவாளோ'
'கன்றினுக்குச் சேதா கனிந்திரங்கல்போல்'
'கொள்ளித்தேள் கொட்டிக் குதிக்கின்ற பேய்க் குரங்காய்'
'தாயன்றிச் சூலுமுண்டோ'
'கல்லெறியப்பாசி கலைந்து நன்னீர்காணும்'
'கல்கண்டால் ஓடுகின்ற காக்கைபோல்'
'வாலற்ற பட்டமென'.

சுவாமிகளைப் பற்றி அவருடைய மாணாக்கரும் அவர் சிறிய தாயார் மகனுமான அருளையர் என்பார் அருள்வாக்கிய அகவல் ஒன்றைப் பாடியிருக்கின்றார்.

உலகினுக் கணியாம் இராமநா தபுரத்
துயர்நறை வாவியின் குணபால்
மலர் நிறை வனத்திற் சிவத்துறு நிட்டை
மருவிமெய் யொருவிலே தாந்தத்
திலகிய பொருளால் வானமாய் நிறையுந்
எந்தையே! எனதுபந் தமும்போய்
நிலையுற நினது திருவருள் அளிப்பாய்;
நின்மலா னந்தமே! போற்றி!

—அருளையர்.

ஒன்றென் றிரு தெய்வம் உண்டென் றிரு

—பட்டினத்தார்.

# ✳ தக்ஷிணாமூர்த்தி ✳

சிவன் கோயிலை வலம் வரும்போது கர்ப்பக்கிரகத்தின் தென்புறத்தில் தக்ஷிணாமூர்த்தியின் திருவுருவத்தைக் காண்கிறோம். அம்மூர்த்தியின் தத்துவம் என்ன என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டியதவசியம். மகேசுவரவடிவங்கள் இருப்பத்தைந்தில் ஒன்று தக்ஷிணாமூர்த்தம். அந்த தென்முகக் கடவுள் கல்லாலமரத்தின் கீழ் யோகாசனத்தமர்ந்து சனகாதி முனிவர் நால்வருக்கும் உபதேசிக்கிறார். முயலகனை மிதித்த திருவடியொன்றும் வீராசனமாக மற்றொரு திருவடியும், நான்கு திருக்கரங்களில் வலப்பக்கமுள்ள இரண்டில் சின்முத்திரையும் உருத்திராக்கமணிவடமும், இடது பக்கமுள்ள இரண்டு திருக்கைகளில் அமுத கும்பமும் வேதமும் இருக்கின்றன. இருபக்கங்களிலும் இவ்விரண்டு பேராக சனகாதி முனிவர்கள் நால்வர் குருவுபதேசம் பெறு முறையில் அமர்ந்திருக்கின்றனர். சின் முத்திரையை (ஞான அடையாளத்தை) தக்ஷிணாமூர்த்தி யோகவடிவாய் இருந்து அம்முனிவர்களுக்குக் காட்டி ஐயநீக்கம் செய்தார். அதனால் தான்,

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா
றங்கமுதல் கற்றகேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்

என்னும் திருவிளையாடற் புராணப் பாட்டு எழுந்தது. சிவபெருமானுக்கு இந்த யோக வடிவம் தவிர, போக வடிவம், வேக வடிவம் ஆகிய வேறிரு வடிவங்களுமுண்டு என்று சிவஞான சித்தியாரில் "போகியாய் இருந்து" என்னும் தொடக்கத்துச் செய்யுளால் அறிகிறோம். அவரது மூன்று வடிவங்களுள் இந்த யோகவடிவமே சிறந்த வடிவம். யோக முறையைக்காட்டினவர்) **யோக தக்ஷிணாமூர்த்தி**. தும்புருவர், நாரதர், சுகர் முதலியோருக்கு வீணையின் இலக்கணத்தை உணர்த்தி அதை வாசித்துக் காட்டினவர் **வீணா தக்ஷிணாமூர்த்தி** என்பர்.

**சின்முத்திரை** : சித்+முத்திரை=ஞானத்தைக் காட்டும் அடையாளம். இதைக் **கை காட்டு** என்றும் கூறுவர். கச்சியப்ப முனிவர்,

மும்மலம் வேறுபட் டொழிய மொய்த்துயிர்
அம்மலர்த் தாள்நிழல் அடங்கு முண்மையைக்
கைம்மலர்க் காட்சியிற் கதுவ நல்கிய
செம்மலை யலதுளஞ் சிந்தி யாதரோ

என்ற பாடலால் சின் முத்திரையை விளக்கியிருக்கிறார். சின் முத்திரையென்பது வலது கையால் அதன் பெரு விரலையும் அதன் சுட்டு விரலையும் ஒன்றாய்ச் சேர்த்தும், மற்ற மூன்று விரல்களை நீட்டியும் காட்டும் அடையாளம். அப்போது, சாதாரணமாய்த் தனித்து நிற்கும் பெரு விரலானது தனக்குப் பக்கத்திலுள்ள சுட்டுவிரலை மற்ற விரல்களினின்றும் நீக்கி, தன்னுடன் சேர்த்துக்கொள்ளும். அதனால் **பெருவிரலாகிய இறைவன், சுட்டுவிரலான ஆன்மாவை**, மற்ற மூன்று விரல்களாகிய **ஆணவம், கன்மம், மாயை** என்ற மும்மலங்களினின்றும் நீக்குவன் என்று அறிகிறோம். நடுவிரல், சுட்டு விரலைவிட நீண்டிருத்தல் ஆணவத்தின் தன்மையை உணர்த்தும். அணிவிரல் கன்மத்தையும், கடைவிரல் மாயையும் குறிக்கும். ஆணவாதிமலங்கள் **பாசம்** என்றும், உயிரானது **பசு** என்றும், இறைவன் **பதி** எனவும் சித்தாந்தத்தில் வழங்கப்படும். எனவே சின்முத்திரையானது பதி பசு பாசங்களின் இலக்கணத்தையும், பசு செய்யவேண்டிய சாதனங்களையும், அது அடையும் பயனையும் விளக்கும் குறியாகும். கை விரல்களால் காட்டும் அடையாளத்தைக் கொண்டே சைவசித்தாந்தத்தை விளக்கியிருப்பது சைவ சமயம் இயற்கைக்குப் பொருத்தமாகவே அமைந்திருப்பது உணரத்

---

பத்திவலையிற் படுவோன் காண்க

—மாணிக்கவாசகர்.

தக்கது. கட்டை விரலுடன் சுட்டு விரல் சேர்ந்து உண்டாகும் வட்டவடிவம் அவை ஒன்று இரண்டு என்று சொல்லவொண்ணாத நிலையைக் காட்டும்; அதாவது அத்துவித முத்தியைக் காட்டும்.

**அமுதகும்பம்:** இடது திருக்கரத்தில் இருக்கிறது; மல நீக்கம், சிவப்பேறு என்னும் பயன் இரண்டும் வாய்ப்பதற்குச் சாதனம் சிவஞானம் என்பதை உணர்த்தும்.

**உருத்திராக்கமணிவடம்:** மற்றொரு திருக்கையில் இருப்பது; சிவஞானத்தில் நிலைத்தற் பொருட்டு திருஐந்தெழுத்தைக் கணிக்க வேண்டுமென்பதை உணர்த்துவது.

**முயலகனை மிதித்த திருவடி:** சிவஞானிகள் சீவன்முத்தராய் வாழுங்காலத்து ஆணவ மலம் தலையெடுக்காவண்ணம் அதனை அமிழ்த்துதற்குரிய சாதனஞ் செய்து வரவேண்டுமென்பதைத் தெரிவிப்பது.

**வீராசனம்:** ஜீவன்முத்தர் மலநீக்கத்திற்குரிய சாதனம் செய்து வருதலோடு, மலம் நீங்கிய சிவனடியாருடன் கூடி, சிவபக்தரல்லாதாரோடு இணங்காது வீரமாய் இருக்க வேண்டுமென்பதை அறிவிப்பது. அப்பர், ''ஈசன்பல் கணத்தெண்ணப்பட்டு....இறுமாந்திருப்பன்கொலோ'' என்று அருளியிருப்பது ஈண்டு நினைவு கூர்தற்குரியது.

**வேதம்:** இது மற்றொரு திருக்கரத்தில் இருப்பது. இது சிவஞானபோதமே என்பர் ஆன்றோர். மூன்று திருக்கரங்களினாலும் இரண்டு திருவடிகளாலும் உணர்த்திய உண்மைப் பொருளை இனிது விளக்குவது.

**கல்லால்நீழல்:** விருப்பு வெறுப்பு முதலிய வெப்பந்தருகின்ற இராசததாமத குணங்களைச் சாராது, சாந்தத்தைத்தரும் சத்துவ குணத்தைச் சார்ந்திருக்க வேண்டுமென்பதை உணர்த்துவது.

**தென்முகம்:** கடவுள் தென்முகமாக வீற்றிருப்பதை அகோரமுகம் என்பர். அகோரம் என்பது கோரமின்மையைக் குறித்து அனுக்கிரகத்தை உணர்த்துவது.

உயிர் இறைவனைச்சேர்ந்திருக்கும்போது சதா ஆனந்தத்திலிருக்கும். இனம் இனத்தோடாதலின் உயிர் எக்காலத்தும் மலமாகிய சடத்தோடு கூடாது; அறிவுப் பொருளாகிய இறைவனோடு கூடும். இப்படிச் சோரதமுத்தி பதமுத்தியென்பர்; அதாவது உயிர் அப்போது சிவ உலகத்தில் தான் செய்த சரியை, கிரியை, யோகத்தின் பலனைத்துய்க்கும். ஞான நிலையில் தான் அத்துவிதமுத்தி கிட்டும். அந்த ஞானமாவது எப்பொருளையும் ஆக்குபவன் ஈசனேயென்றும், யாவற்றையும் இயக்குபவன் இறைவனேயென்றும் அறிந்து தன் செயலற்றிருத்தல். அது மகாவாக்கியத்தைக் கேட்டு, சிந்தித்து, தெளிந்து, நிட்டையில் அமர்வதால் ஏற்படும். இவ்வாறு தக்ஷிணாமூர்த்தியால் சந்தேக நிவர்த்தி செய்துகொண்ட சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர் என்ற நால்வர்களும் நிட்டையிலிருந்து ஆனந்தம் அனுபவித்தனர் என்று அறிகிறோம்.

சிவாலயத்தை வலம் வருவோர் தென்முகக் கடவுளின் திருமுன் சற்று அமர்ந்து, மௌனத்தியானம் செய்து, ஐந்தெழுத்தோதி, வணங்கிச் செல்லவேண்டியது முறை. இந்த மூர்த்தத்தின் பெருமையை உணர்ந்த பிளாவட்சுகியம்மையார் அவரை Silent watcher என்னும் பெயரால் அழைத்தார். மொஹஞ்சொதாரா, ஆரப்பா இவ்விடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பொருள்களில் சிவவழிபாட்டைக் குறிக்கும் பல முத்திரைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு முத்திரையில் மூன்று முகங்களைக் கொண்ட ஆண்மகன் யோகத்தில் அமர்ந்துள்ள நிலையில் ஓர் உருவம் காணப்படுகிறது. அந்த யோகியின் திருவடிகட்கு அண்மையில் இரண்டு மான்கள் உள்ளன. இவ்வாறு விளங்கும் யோகியின் உருவம் சிவனைக் குறிப்பதாக சர் ஜான்மார்ஷல் முதலிய ஆராய்ச்சியறிஞர்கள் கருதுகின்றனர். சுண்ணாம்புக்கல் முத்திரையொன்றில் யோகியின் உருவிற்கு இரண்டு பக்கங்களிலும் இரண்டு நாகர்கள் மண்டியிட்டு வணங்குவதுபோலும் காணப்படுகின்றது. இவையெல்லாம் தென்முகக் கடவுள் வழிபாட்டின் தொன்மையைக் குறிப்பனவேயாம்.

பன்முத்திரைச் சமயம்
பாம்படக் கல்லாலடிவாழ்
சின்முத்திரை அரசைச்
சேர்வேனோ பைங்கிளியே.

—தாயுமானவர்

# சிவ விஷ்ணுத்தல அட்டவணை

## சிவத்தலங்கள்

| | தலம். (1) | இறைவன் இறைவி. (2) | பாடல். (3) | இரயில் நிலயம். (4) | குறிப்பு. (5) |
|---|---|---|---|---|---|
| | | | **சோழ நாடு** | | |
| | | | **தஞ்சாவூர் மாவட்டம்** | | |
| 161 | திருவேட்டக்குடி ... | திருமேனியழகர் சாந்த நாயகி. | சம்பந்தர் | ... காரைக்கால் | ... அருச்சுனன் தவஞ்செய்து கொண்டு இருக்கும்பொழுது சிவபெருமான் வேட ரூபமாக வெளிப்பட்ட தலம். |
| 162 | திருவேதிகுடி ... | வேதபுரீசுவரர் மங்கையர்க்கரசி. | சம்பந்தர், அப்பர் | ... தஞ்சாவூர் | ... சப்தஸ்தான தலம். வேதங்கள் பூசித்த தலம். வேத விநாயகர் விசேடம். |
| 163 | திருவேள்விக்குடி ... | கல்யாணசுந்தரேசுவரர் பரிமள சுகந்தநாயகி. | சம்பந்தர், சுந்தரர் | ... குற்றாலம் | ... சிவபெருமான் ஓர் அரசகுமாரனுக்கு நிச்சயித்திருந்த பெண்ணை மணம் முடித்து வைத்த தலம். |
| 164 | வைகன்மாடக் கோயில். | வைகநாதர் வைகலாம்பிகை. | சம்பந்தர் | ... ஆடுதுறை | ... மாடக்கோயில். |
| 165 | திருவைகாவூர் ... | வில்வவனேசுவரர் வளைக்கைநாயகி அம்மை. | ,, | ... கும்பகோணம் | ... சிவராத்திரிக்கு முக்கியமான தலம். |
| 166 | திருவிடவாயில் ... | புண்ணியகோடிநாதர் அபிராமியம்மை. | ,, | ... கொரடாச்சேரி | ... கோயில் சுவரிலேயே தேவாரக் கல்வெட்டு உள்ளது. |

| | (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| | | | **திருச்சிராப்பள்ளி மாவட்டம்** | | |
| 167 | அன்பிலாலந்துறை. | சத்யவாகீசுவரர் சௌந்தரநாயகி. | சம்பந்தர், அப்பர் ... | லால்குடி ... | செவிசாய்ந்த விநாயகர் சிறப்பு. பிரமன், வாகீச முனிவர் பூசித்த தலம். |
| 168 | திருஆனைக்கா ... | ஜம்புகேசுவரர் அகிலாண்டநாயகி | சம்பந்தர், அப்பர், சுந்தரர். | திருச்சி ... | கோச்செங்கட் சோழனால் கட்டப்பட்ட ஆலயம். மேற்குப் பார்த்த சந்நிதி. அப்பு தலம். தேவி சந்நிதி சிறப்பு. ஆறுய நாயனருடைய அவதாரதல மான திருமங்கலம் 10 மைலில் இருக்கிறது. |
| 169 | திருஈங்கோய்மலை ... | மரகதாசலேசுவரர் மரகதவல்லி. | சம்பந்தர் ... | குழித்தலை ... | அகத்தியர் ஈ ரூபமாக பூசித்த தலம். கோயில் குன்றின்மேல் இருக்கின்றது. |
| 170 | திரு எறும்பியூர் ... | எறும்பீசுவரர் நறுங்குழல்நாயகி. | அப்பர் ... | திருவெறும்பூர் ... | தேவர்கள் எறும்பு ரூபமாக வந்து பூசித்த தலம். கோயில் குன்றின் மேல் இருக்கின்றது. பிரமனும், விஷ்ணுவும் பூசித்த தலம். |
| 171 | திருச்சிராப்பள்ளி ... | தாயுமானேசுவரர் மட்டுவார்குழலம்மை. | சம்பந்தர், அப்பர் .. | திருச்சி ... | தக்ஷிண கைலாசம் எனப்படும். மேற்குப் பார்த்த சந்நிதி. தேவி சந்நிதி சிறப்பு. இடங்கழி நாயனருடைய அவதார தலமான கொடும்பாளூர் புதுக்கோட்டைக்கும் போகும் வழியில் 25 மைலில் இருக்கிறது. பெருமிழலை குறும்ப நாயனருடைய அவதார தலமான மிழலை புதுக்கோட்டைக்கு அப்பால் 10 மைலில் இருக்கிறது. கும்பகோணத்திற்குப் பக்கத்தில் 5 மைலில் உள்ள மிழலை என்றும் சொல்வர் சிலர். |
| 172 | திருக்கற்குடி (உய்யக்கொண்டான்). | உஜ்ஜீவனேசுவரர் அஞ்சனாக்ஷியம்மை. | சம்பந்தர், அப்பர், சுந்தரர். | திருச்சி ... | மேற்குப் பார்த்த சந்நிதி. கரன் வழிபட்ட தலம். வயலூர் சுப்பிரமணிய தலம் பக்கத்தில் இருக்கிறது. |

| | (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| 173 | திருக்கடம்பந்துறை. | கடம்பவனநாதர் முற்றிலாமுலையம்மை. | அப்பர் | ... குழித்தலை | ... சந்நிதி வடக்கு நோக்கியது. கண்வமுனிவருக்கும், தேவர்களுக்கும் சிவபெருமான் கடம்ப விருக்ஷத்திலிருந்து காட்சி கொடுத்த தலம். |
| 174 | நெடுங்களம் ... | நித்யசுந்தரேசுவரர் ஒப்பிலா நாயகி. | சம்பந்தர் | ... சோழகம்பட்டி | ... ...... |
| 175 | திருப்பராய்த்துறை. | பராய்த்துறைநாதர் பொன்மயிலம்மை. | சம்பந்தர், அப்பர் | ... எலமனூர் | ... இந்திரனும், குபேரனும், சப்த முனிவர்களும் பூசித்த தலம். |
| 176 | திருப்பழுவூர் ... | வடமூலநாதர் அருந்தவநாயகி. | சம்பந்தர் | ... அரியலூர் | ... பரசுராமர் தன் தாயைக் கொன்றபழி நீங்க வழிபட்ட தலம். அவருடைய உருவம் கோயிலில் இருக்கிறது. |
| 177 | திருப்பாச்சிலாச்சிராமம் (திருவாசி) | மாற்றறிவரதர் பாலசௌந்தரி. | சம்பந்தர், சுந்தரர் | ... பிக்ஷாண்டார் கோயில். | சம்பந்தர் கொல்லிமழவன் குமாரத்திக்கு முயலகன் என்னும் வியாதியைத் தீர்த்தருளிய தலம். இங்குள்ள நடராசர் சர்ப்ப நடன மூர்த்தி. |
| 178 | திருப்பாற்றுறை ... | மூலநாதர், மேகலாம்பிகை. | சம்பந்தர் | ... ஸ்ரீரங்கம் | ... மார்க்கண்ட முனிவர் அபிஷேகம் செய்யப் பால் இல்லாமல் வருந்த சிவபெருமான் பால் பெருகும்படி அருளிய தலம். |
| 179 | திருப்பைஞ்ஞீலி ... | நீலகண்டர், விசாலாக்ஷியம்மை. | சம்பந்தர், அப்பர், சுந்தரர். | திருச்சி | ... பசியினால் வருத்தமுற்ற அப்பர்சுவாமிகளுக்கு சிவபெருமான் கட்டமுது கொடுத்தருளிய தலம். |
| 180 | திருமழபாடி ... | வஜ்ரஸ்தம்பேசுவரர், அழகம்மை | ,, | தஞ்சாவூர் | ... நந்திதேவருக்குத்திருமணம் நடந்த தலம். சுந்தர கணபதி சிறப்பு. திருமாலும், இந்திரனும் வழிபட்ட தலம். |
| 181 | திருமாந்துறை ... | ஆம்பிரவனேசுவரர், அழகாலுயர்ந்த அம்மை. | சம்பந்தர் | ... லால்குடி | ... கண்ணுவ முனிவர் வழிபட்ட தலம். |

| | (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| 182 | திருமூக்கீச்சுரம் .. | பஞ்சவர்ணேசுவரர், காந்திமதி | சம்பந்தர் | திருச்சி ... | புகழ்ச்சோழ நாயனருடைய தலம். பிரமன் வழிபடும்பொழுது வேளைக்கொரு வர்ணமாகக் காட்சி கொடுத்தருளிய தலம். யானையைக் கோழி வென்றமையால் இத்தலத்திற்குக் கோழியூர் என்றும் பெயர் உண்டு. |
| 183 | வாட்போக்கி (இரத்தினகிரி) | இரத்னகிரீசுவரர், கரும்பார்குழலம்மை | அப்பர் ... | குழித்தலை ... | மேற்குப் பார்த்த சந்நிதி. கோயில் உயரிய மலைமேல் இருக்கிறது. இந்திரன், சயந்தன், வாயு, ஆதித்தன், ஆதிசேடன், அகத்தியர் முதலியோர் வழிபட்ட தலம். மத்தியான தரிசனம் சிறப்பானதால் மத்தியான சுந்தரர் என்றும் பெயர் உண்டு. ஆரிய அரசனால் வெட்டுப்பட்ட வாட்குறி லிங்கத்தில் இருக்கிறது. ஆகையால் சுவாமிக்கு முடித்தழும்பர் என்றும் திருநாமம் உண்டு. |

## சோழ நாடு

### தென் ஆற்காடு மாவட்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 184 | ஓமாம்புலியூர் ... | துயர்தீர்த்தநாதர் பூங்கொடிநாயகி | சம்பந்தர், அப்பர் ... | சிதம்பரம் ... | புலிக்குப் பயந்து மரத்தின்மேல் ஏறிய ஒரு வேடன் வில்வத்தை சிவலிங்கத்தின்மேல் போட அவனுக்கு சிவபெருமான் பிரத்யக்ஷமாகி அருளிய தலம். |
| 185 | திருக்கடம்பூர் .. | அமிர்தகடேசுவரர் சோதிமின்னம்மை | ,, ... | ,, ... | இந்திரன் வழிபட்டு அமிர்தம் உண்டாகும்படி வரம் பெற்ற தலம். மூலஸ்தானம், ரதம், சக்கரம், குதிரையுடன் இருக்கிறது. |
| 186 | திருக்கழிப்பாலை ... | பால்வண்ணநாதேசுவரர், வேதநாயகி | சம்பந்தர், அப்பர். சுந்தரர் | ,, ... | இத்தலம் கொள்ளிட நதியாற் கொண்டு போய்விட்டபடியால் மூர்த்திகள் சிவபுரியில் வைத்து ஆராதிக்கப்படுகின்றன. |

| | (1) | (2) | (3) | (4) | (5) |
| --- | --- | --- | --- | --- | --- |
| 187 | திருக்காளுட்டுமுள்ளூர் (காளுட்டம்புலியூர்) | பதஞ்சலிநாதேசுவரர், கோல்வளைக்கை நாயகி | சுந்தரர் | சிதம்பரம் | பதஞ்சலி முனிவர் வழிபட்ட தலம். |
| 188 | கோயில் (சிதம்பரம்) | திருமூலநாதர், உமையம்மை | சம்பந்தர், அப்பர், சுந்தரர் | சிதம்பரம் | பதஞ்சலி, வியாக்கிரபாதர்களுக்காக நடராஜப்பெருமான் ஆனந்ததாண்டவமாடும் பதி. இது பஞ்ச சபைகளில் கனகசபை (பொன்னம்பலம்). மாணிக்கவாசகர், திருநீலகண்ட நாயனர், திருநாளைப்போவார், கூற்றுவநாயனர்; கொச்செங்கட்சோழநாயனர், கணம்புல்லர், மறைஞான சம்பந்தசிவாசாரியார், உமாபதி சிவாசாரியார், முக்திபெற்ற தலம். நம்பியாண்டார் நம்பியால் தேவாரப் பதிகங்கள் கண்டெடுக்கப்பட்ட தலம். கோவிந்தராஜப்பெருமாள் சந்நிதி இருக்கின்றது. கணம்புல்ல நாயனருடைய அவதார தலமான இருக்குவேளூர் இரயில் நிலயத்திலிருந்து 5 மைலில் இருக்கிறது. |
| 189 | திருநெல்வாயில் (சிவபுரி) | உச்சிநாதேசுவரர் ஜகதாம்பிகை | சம்பந்தர் | ,, | திருக்கழிப்பாலை மூர்த்திகள் இங்கு வைத்து ஆராதனை செய்யப்படுகின்றன. |
| 190 | திருவேட்களம் | பாசுபதேசுவரர், நல்லநாயகி | சம்பந்தர், அப்பர் | சிதம்பரம் | அருச்சுனருக்குப் பாசுபதாஸ்திரம் கொடுத்தருளிய தலம். இத்தலம் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் பக்கத்தில் இருக்கிறது. |
| 191 | திருநாரையூர் | சௌந்தரேசுவரர், திரிபுரசுந்தரியம்மை. | ,, | ,, | நாரை வழிபட்ட தலம். சிதம்பரத்திலிருந்த தேவாரத் திருமுறைகளை நம்பியாண்டார் நம்பிகள் மூலமாய் வெளிப்படுத்தியருளிய பொல்லாப் பிள்ளையார் எழுந்தருளியிருக்கும் தலம். |

## நடு நாடு

### தென் ஆற்காடு மாவட்டம்.

| | (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| 1 | திரு அதிகை | வீரட்டேசுவரர் திரிபுரசுந்தரி. | சம்பந்தர், அப்பர், சுந்தரர். | பண்ணுருட்டி | அட்ட வீரட்டானங்களில் ஒன்று. திரிபுர தகனஞ்செய்த தலம். திலகவதியார் வழிபட்ட தலம். அப்பர்சுவாமிகள் சூலைநோய் தீரப்பெற்ற தலம். அப்பருடைய அவதார தலமான திருவாமூர் 1 மைலில் இருக்கிறது. காடவன் என்னும் சமண அரசன் சைவத்திற்கு மாறின பின் கட்டிய குணதரேச்சரம் ஆலயம் இடிந்து போன நிலையில் இருக்கிறது. |
| 2 | அறையணிநல்லூர் | அறையணிநாதேசுவரர் அருள்நாயகி. | சம்பந்தர் | திருக்கோவிலூர் | மேற்குப் பார்த்த சந்நிதி. கோயில் ஒரு சிறு குன்றின்மேல் இருக்கிறது. பிரசண்ட முனிவர் வழிபட்ட தலம். |
| 3. | திரு ஆமாத்தூர் | அபிராமேசுவரர் முத்தாம்பிகை. | சம்பந்தர், அப்பர் சுந்தரர். | விழுப்புரம் | இராமர் வழிபட்ட தலம். |
| 4 | இடையாறு | இடையாற்றீசுவரர். சிற்றிடைநாயகி | சுந்தரர் | திருவெண்ணெய் நல்லூர். | சுகர் வழிபட்ட தலம். |
| 5 | எருக்கத்தம்புலியூர் (இராஜேந்திரபட்டணம்). | நீலகண்டேசுவரர் நீலமலர்க்கண்ணம்மை. | ,, | விருத்தாசலம் | திருநீலகண்டயாழ்ப்பாணர் அவதாரம் செய்த தலம். இங்கிருந்து 4 மைலில் ஸ்ரீமுஷ்ணம் என்னும் பிரபல விஷ்ணு தலம் இருக்கிறது. |
| 6 | கூடலையாற்றூர் | நெறிகாட்டுநாயகர் புரிகுழலாம்பிகை. | ,, | சிதம்பரம் | விருத்தாசலம் போகும் சுந்தரரை சுவாமி அழைத்து வந்து பதிகம் பெற்ற தலம். |
| 7 | திருக்கோவலூர் | வீரட்டேசுவரர் சிவானந்தவல்லி. | சம்பந்தர், அப்பர் | திருக்கோவிலூர் | அட்ட வீரட்டானங்களில் ஒன்று. அந்தகாசுரனை சங்கரித்தது. மெய்ப்பொருள் நாயனருடைய திருப்பதி. மேற்குப் பார்த்த சந்நிதி. |
| 8 | திருச்சோபுரம் (தியாகவல்லி) | சோபுர நாதர் சோபுரநாயகி. | சம்பந்தர் | ஆலப்பாக்கம் | அகத்தியர் வழிபட்ட தலம். |

| | (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| 9 | திருத்தினை நகர் ... | சிவக்கொழுந்தீசுவரர் ஒப்பிலாநாயகி. | சம்பந்தர் | ... புதுச்சத்திரம் ... | பெரியான் என்னும் மன்னனுக்கு சுவாமி நிலத்தில் தினை விளைவித்த காரணத்தால் திருத்தினை நகர் என்னும் பெயர் வந்தது. |
| 10 | திருத்துறையூர் ... | பசுபதீசுவரர் பூங்கோதைநாயகி. | ,, | ... பண்ணுருட்டி ... | மேற்குப் பார்த்த சந்நிதி. அருள்நந்தி சிவாசாரியார் அவதரித்து முத்தி பெற்ற தலம். |
| 11 | திருநாவலூர் (திருநாமல்லூர்). | திருநாவலேசுவரர் சுந்தரநாயகியம்மை. | சுந்தரர் | ... இருந்தை ... | சுந்தரர், சடையனார், இசை ஞானியார் இவர்களுடைய அவதார தலம். நரசிங்க முனையரைய நாயனாருடைய அவதார தலம். வரதராஜப்பெருமானுடைய சந்நிதி உள்ளது. |
| 12 | திருநெல்வாயில் அறத்துறை. | அறத்துறைநாதர் ஆனந்தநாயகி. | சம்பந்தர், அப்பர் சுந்தரர். | பெண்ணாகடம் .. | சம்பந்தசுவாமிகளுக்கு சிவபெருமான் முத்துச் சிவிகையும், முத்துக் குடையும் கொடுத்தருளிய தலம். |
| 13 | திருநெல்வெண்ணெய். | வெண்ணெய்யப்பர் நீலமலர்க்கண்ணம்மை. | சம்பந்தர் | ... உளுந்தூர்ப் பேட்டை. | சநகர், சனத்குமாரர் வழிபட்ட தலம். |
| 14 | திருப்பாதிரிப்புலியூர் | தோன்றாத்துணைநாதர் பெரியநாயகி. | சம்பந்தர், அப்பர் | ... திருப்பாப்புலியூர்... | வியாக்ரபாதர் வழிபட்ட தலம். |
| 15 | புறவார்பனங்காட்டூர் (பனையபுரம்). | பனங்காட்டேசுவரர் புறவம்மை. | சம்பந்தர் | ... முண்டியம்பாக்கம். | சூரியன் வழிபட்ட தலம். புறாவுக்காக சிபிச்சக்ரவர்த்தி தன் கண்ணைப் பறித்திட்டதும் சுவாமி பிரத்யக்ஷமானதால் சுவாமிக்கு நேத்ரோத்தாரக ஈசுவரர் என்று பெயர். |
| 16 | பெண்ணாகடம் (தூங்கானைமாடம்) | சுடர்க்கொழுந்தீசுவரர், கடந்தைநாயகி. | சம்பந்தர், அப்பர் | ... பெண்ணாகடம் ... | தேவகன்னியரும், காமதேனுவும் வெள்ளையானையும் வழிபட்ட தலம். கலிக்கம்ப நாயனாருடைய தலம். |

| | (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| 17 | திருமாணிகுழி ... | மாணிக்க வரதர் மாணிக்க வல்லி. | சம்பந்தர் ... | திருப்பாப்புலியூர். | வாமனுவதாரம் செய்த விஷ்ணு சிவபெருமானை வழிபட்ட தலம். |
| 18 | திருமுண்டீசுரம் (கிராமம்) | சிவலோகநாதர், கானார்குழலியம்மை | அப்பர் ... | திருவெண்ணெய் நல்லூர் | பிரமனும், தேவேந்திரனும் வழிபட்ட தலம். |
| 19 | திருமுதுகுன்றம் (விருத்தாசலம்) | பழமலைநாதர், பெரியநாயகி | சம்பந்தர், அப்பர், சுந்தரர். | விருத்தாசலம் ... | சுந்தரமூர்த்திசுவாமிகள் பரவையாரின் பொருட்டு சுவாமியை வேண்டிப்பொன் பெற்ற தலம். காசியினும் சிறந்தது என்று கந்தபுராணத்தில் கூறப்பட்டிருக்கிறது. |
| 20 | வடுகூர் (ஆண்டார் கோயில்) | வடுகேசுவரர், வடுவகிர்க்கண்ணம்மை | சம்பந்தர் ... | சின்னபாபு சமுத்திரம் | வடுகனாகிய வைரவர் வழிபட்ட தலம். |
| 21 | திருவெண்ணெய்நல்லூர் (திருவருட்டுறை) | தடுத்தாட்கொண்டநாதர், வேற்கண்ணியம்மை | சுந்தரர் ... | திருவெண்ணெய் நல்லூர். | சுந்தரர் தடுத்தாட்கொள்ளப்பெற்ற தலம். |
| | | | **வடஆற்காடு மாவட்டம்** | | |
| 22 | திருஅண்ணாமலை ... | அருணாசலேசுவரர், உண்ணாமுலையம்மை | சம்பந்தர், அப்பர் ... | திருவண்ணாமலை ... | "யான்பரம்" என்று தர்க்கித்த பிரம விஷ்ணுக்களுக்கு முன் சிவபெருமான் அக்னி மலையாய்த் தோன்றி அவர்கள் அன்னமாயும், பன்றியாயும் சென்று முடியையும் அடியையும் தேடிக் காணாமல் அகந்தை தீர்ந்து நிற்கத் தாமே பரம்பொருள் என்று ஸ்தாபித்தருளிய தலம். இதை ஒட்டி நடக்கும் கார்த்திகை மாத தீப தரிசனம் சிறப்பு மிக்கது. தேயு தலம். அருணகிரிநாதர் பிறந்த ஊர். அவருக்கருளிய கம்பத்து இளையனார் ஒரு தம்பத்தில் இருக்கிறார். |